Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 01, 2022

வியாழக்கிழமை 01, டிசம்பர் 2022 | ஒளி: 08 கதிர் 155 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## நவம்பர் மாதத்துக்கான பணவீக்கமும் வீழ்ச்சி

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் ஒட்டுமொத்த பணவீக்கமானது நவம்பர் மாதத்தில் 61 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், புதன்கிழமை (30) தெரிவித்தது.

தொடர்ச்சி P2



மட்டக்களப்பு மாவட்டத்தில்

## அரச காணிகளை விடுவிக்க தீர்மானம்

கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட ''மாவட்டத்தின் உற்பத்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கென அடையாளம் காணப்பட்ட அரச காணிகளை வனவள துறையிடம் இருந்து விடுவிப்பது'' என்ற தீர்மானத்திற்கு அமைவாக நேற்றைய தினமும் கமத்தொழில், வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் விசேட கூட்டம் ஒன்றினை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



தமிழ்த்தரப்பிடையே

# ஒற்றுமை வேண்டும்

**செல்வம் வலியுறுத்து: மாவட்ட அபிவிருத்தி சபையா இனப் பிரச்சினைக்கு தீர்வு என்றும் கேட்டார்**

■ பா.நிரோஸ்

தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை தீர்க்கப்போவதாக ஜனாதிபதி கூறிவிட்டு, மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையையா தீர்வாக வழங்கப்போகிறார் என கேள்வி எழுப்பும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இனப் பிரச்சினையை தீர்க்கும் விடயத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே ஒற்றுமை வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தட்டிக்கழிக்கப்பட்டதை தொட்டும் பார்க்க தயாரில்லை



பல தசாப்தங்களுக்கு முன்னர் தட்டிக்கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபையை தமிழ் மக்கள் தொட்டுப் பார்க்கக்கூட தயாராக இல்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழினம் தோற்று விட்டதாக யாருமே கருதக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வாக மாவட்ட அபிவிருத்தி சபையை பரிசீலிப்பது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பாராளுமன்றில்

தொடர்ச்சி P2

மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்தி குழுக்கள்

## கதைக்கு மறுப்பு

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை**

மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபிக்க ஜனாதிபதி தயாராகி வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று (29) தெரிவித்த பதில், அர்த்தத்தை சிதைக்கும் விதத்தில் பல ஊடகங்களில் செய்திகளாக வெளியாகியுள்ளன.

எனினும், 2023ஆம் நிதியாண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில்,

தொடர்ச்சி P2

## ஆடைச் சுற்றறிக்கைகள் இரண்டும் உடன் இரத்து

பணியாளர் தர அதிகாரிகளின் உத்தியோகபூர்வ ஆடை தொடர்பாக 2019 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட இரண்டு அரசாங்க சுற்றறிக்கைகள் உடனடியாக இரத்துச் செய்யப்படுவதாக, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## 66ஆயிரம் குடும்பங்களுக்கு உணவு நிவாரணம்

பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் குடும்பங்களில், நாடளாவிய ரீதியிலுள்ள 66,000 குடும்பங்களுக்கான உணவு நிவாரணம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மாதாந்தம் 15,000 ரூபாய் அடிப்படையில் 6 மாதங்களுக்கு குறித்த நிவாரணம் வழங்கப்படும் என உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் பிரதம அதிகாரி, ஜனாதிபதி ஆலோசகர், கலாநிதி சுரேன் பட்டகொட தெரிவித்துள்ளார்.


## யாத்திரிகளின் கவனத்திற்கு

■ எம்.றொசாந்த், நிதர்ஷன் வினோத்

இந்தியாவுக்கு தல யாத்திரைகள் செல்ல இருப்பவர்கள் சுகாதார முற்பாதுகாப்பு ஆலோசனைகளை பின்பற்றி மலேரியா தொற்றிலிருந்து எம்மையும் எமது நாட்டையும் பாதுகாக்க வேண்டுமென யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஐ.எம்.எப்பின் தீர்வுகள் கசப்பாக இருக்கும்



சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவது நோயாளி வைத்தியரை பார்க்கச் செல்வது போன்றது எனவும், அது தரும் தீர்வுகள் சில சமயங்களில் விரும்பத்தகாததாக கசப்பாக இருக்கும் எனவும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் திரு.இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் கருத்துத் தெரிவித்த முன்னாள் ஆளுநர்,

தொடர்ச்சி P2

## சீனா இலங்கையின் உண்மையான நண்பனல்ல

சீனா இலங்கையின் உண்மையான நட்பு நாடு இல்லை என்பதுடன், சீனாவின் முதலீடுகள் இலங்கையின் பொருளாதாரத்தில் எந்த வித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராசமாணிக்கம் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டின் வரவு- செலவுத் திட்டத்தில் கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே சாணக்கியன் எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




1 இலட்சம் லிட்ரோ

## எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படும்

ஒரு இலட்சம் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இன்று (01) நாடு முழுவதும் விநியோகிக்கப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான

## பயன்படுத்தப்படாத காணிகளை சுவீகரிக்கத் தீர்மானம்



பாரிய பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத காணிகளை சுவீகரிப்பது தொடர்பில் தற்பொழுது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான முன்மொழிவை அமைச்சரவையின் அனுமதிக்கு முன்வைத்துள்ளதாகவும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். எதிர்காலத்தில் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## மாணவனின் உடலுக்கு தீயை மூட்டியவருக்கு விளக்கமறியல்

■ ஷேன் செனவிரத்ன

பாடசாலை மாணவனின் உடலுக்கு மண்ணெண்ணெயை ஊற்றி தீ மூட்டினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராக பல்வேறான குற்றச்சாட்டுகளும் நிலுவையில் உள்ளதென தெரியவருகின்றது.

டிசெம்பர் 12ஆம் திகதி வரையிலும் அவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்படும் போது காலில் ஏற்பட்ட காயத்தால், கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ச்சி P2

## பொரளை தேரரும் இசுருவும் பிணையில் விடுவிப்பு

**திலினிக்கும் ஜானகிக்கும் 13 வரை விளக்கமறியல்**

நிதி மோசடி குற்றச்சாட்டு குறித்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த திலினி பிரியமாலியுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொரளை சிறிசுமண தேரர் மற்றும் இசுரு பண்டார ஆகியோரை கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, புதன்கிழமை (30) பிணையில் விடுவித்தார்.

தொடர்ச்சி P2

பெருந்தோட்டக் கம்பனிகள்

## தனியான அரசாங்கம் போன்று இயங்குகின்றன

■ ச. பா.நிரோஸ்

பெருந்தோட்டக் கம்பனிகள் நாட்டின் சட்டங்களை மீறி தனியான அரசாங்கம் போன்று செயற்படுகின்றன என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே வடிவேல் சுரேஷ் எம்.பி இவ்வாறு தெரிவித்தார். அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

200 வருடங்களாக நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் பெருந்தோட்ட சமூகத்தினர் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே. ஆனால் இவர்கள் கண்டுகொள்ளாதவர்களாகவே இருக்கின்றனர். நாட்டில் 10 மாவட்டங்களில் பெருந்தோட்டங்கள் உள்ளன. அந்த தோட்டங்கள் 22 கம்பனிகளுக்கு அரசாங்கம் குத்தகைக்கு கொடுத்துள்ளது. ஆனால் அப்போது வழங்கிய போது இருந்த காணி இப்போது இருக்கின்றதா? 9000 ஹெக்டேயர் காணிகள் தற்போது பயன்படுத்தப்படாது இருக்கின்றன.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## அரச காணிகளை...

இதன்போது நாடுபூராகவும் உள்ள அரச காணிகளை பயன்படுத்தி உற்பத்தி மற்றும் விவசாய நடவடிக்கைகளை அதிகரிப்பதன் அவசியம் தொடர்பிலும் 2019 ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட வனவளத்துறை தொடர்பிலான வர்த்தமானியால் உற்பத்தி மற்றும் விவசாய துறையில் ஏற்பட்ட பின்னடைவுகள் தொடர்பிலும் விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது.

அதனடிப்படையில் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான கள விஜயத்தினை முன்னெடுத்து மேற்குறித்த நோக்கங்களுக்கென அடையாளம் காணப்பட்ட காணிகளை வனவள துறையிலிருந்து விடுவிப்பது என்ற தீர்மானமும் அமைச்சரினால் எட்டப்பட்டது.

இதன் மூலம் பல நன்மைகளை மாவட்டம் சந்திக்கும் என எதிர்பார்க்க படுகின்றது. குறிப்பாக மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மகிழடித்தீவு பகுதியில் சுமார் 380 ஏக்கருக்கும் அதிகமான இறால் வளர்ப்பு திட்டங்கள், மாவட்டத்தின் பல பாகங்களிலும் செய்கை பண்ணுப்படாதுள்ள 1000 ஏக்கருக்கும் அதிகமான வயல் காணிகள், கோறளை பற்று வடக்கு, கோறளைப்பற்று தெற்கு ஆகிய பிரதேசசெயலக பிரிவுகளில் அமையவுள்ள மீன் மற்றும் இறால் வளர்ப்பு திட்டங்கள், என பல விவசாய மற்றும் முதலீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படு த்தப்படவுள்ளன. இதன்முலம் மாவட்டத்துக்கான வருமானத்தினை அதிகரிக்க முடிவதுடன் பல தொழில் முயற்சிகளையும் இளம் சந்ததியினருக்கு உருவாக்கி கொடுக்க முடியும்.

## தட்டிக்கழிக்கப்பட்டதை தொட்டும் பார்க்க தயாரில்லை

செவ்வாய்க்கிழமை (29) தெரிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை தீர்க்கும் வகையில், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக, மாகாணங்களின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன.

அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியும் என்பதையே நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அதுவே அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைச் சாத்தியமான வழிமுறையாகவும் இருக்கின்றது.

இவ்வாறான சூழலில் 80 களின் ஆரம்பத்திலேயே தமிழ் மக்களினால் ஏகோபித்த குரலில் தட்டிக்கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை தொடர்பாக பிரஸ்தாபிப்பதற்கு நாம் தயாராக இல்லை.

2009 ஆம் ஆண்டு இந்த நாட்டில் நிறைவடைந்த யுத்தம் என்பது, இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் சிலரால் முன்னெடுக்கப்பட்ட தவறான வழிமுறைக்கு கிடைத்த தோல்வியாகவே அனைவரும் கருத வேண்டுமே தவிர, தமிழ் மக்கள் தோல்வியுற்ற சம்பவமாக அதனை யாரும் கருதக்கூடாடது.

## பொரளை...

மேலும், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த திகோ நிறுவனத்தின் தலைவர் திலினி பிரியமாலி, ஜானகி சிறிவர்தன ஆகியோரின் விளக்கமறியல் உத்தரவை டிசெம்பர் 13ஆம் திகதிவரை நீடித்து நீதவான் உத்தரவிட்டார். ஸ்கைப் தொழிநுட்பம் மூலம் சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த அமர்வில், சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என்பதாலும் இவர்களுக்கு பிணை வழங்கினால், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட வாய்ப்புள்ளது என்ற காரணத்தையம் கருத்திற் கொண்ட நீதவான், பிணை கோரிக்கையை நிராகரித்திருந்தார்.

## யாத்திரிகளின் கவனத்திற்கு

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு முதல் மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் இலங்கை பிரகடனப்படுத்த ப்பட்டுள்ளது. அதாவது 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மலேரியாத்தொற்று பரவவில்லை.

எனினும், மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகள் போன்ற வேறு நாடுகளில் இருந்துவரும் பயணிகளில் பலர் மலேரியா தொற்றுக்கு உள்ளாகியிருப்பது இனங்காணப்பட்டுள்ளனர். இது மலேரியா அற்ற நாடாக எமது நாட்டை பேணுவதில் நாம் எதிர் நோக்கும் மிகப்பெரிய சவாலாகும் என்றார்.

எனவே, மலேரியா நோய் அதிகம் காணப்படுகின்ற நாடுகளுக்கு தல யாத்திரைகள் செல்பவர்கள் முற்காப்பாக தடுப்பு மருந்துகளை ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே உரிய முறையில் உள்ளெடுப்பதன் மூலம் தமக்கு மலேரியா தொற்று ஏற்படுவதை தடுக்கலாம்.

பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனையிலோ அல்லது 021- 222 7924 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியும்

உங்களில் அல்லது தெரிந்தவர்களில் யாராவது இந்தியா, உள்ளிட்ட நாடுகளுக்கு சென்று திரும்பி இருப்பின், அருகில் உள்ள வைத்தியசாலைகள் ஏதேனும் ஒன்றில் அல்லது சுகாதார அதிகாரி காரியாலயத்தை அணுகி மலேரியா நோய்க்கான குருதிப் பரிசோதனையை செய்துகொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# ஒற்றுமை வேண்டும்

பனை ஊடாகப் பெறக்கூடிய உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதில் எமக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஒடியல், பனங்கற்கண்டு போன்ற பொருள்கள் வெளிநாட்டு, உள்நாட்டு மக்களால் விரும்பி வாங்கப்படுகின்றன. ஆனால் இப்பொருள்களை சந்தைப்படுத்துவதில் தமிழ் மக்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிப்புகளை விடுத்தாலும் பொருள்களின் விலைகள் குறையவில்லை. இந்த விலைக்குறைப்பு அப்பாவி மக்களை சென்றடைவதில்லை. அதிகளவான விலையில் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிறுவனங்களை அரசாங்கம் இழுத்து மூடி வேண்டும். இது உண்மையில் ஒரு மாஃபியா. தங்கள் நினைத்த விலைக்கு பொருள்களை இவர்கள் விற்பனை செய்து வருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

கத்தரிக்காய் ஒரு கிலோ கிராமை விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு பெற்று அவற்றைப் பாரிய விலையில் சந்தையில் விற்பனை செய்கிறார்கள். நெல் சந்தைப்படுத்தல் அதிகாரசபை அரசாங்கம் அறிவித்தலின் விலையில் நெல்களை கொள்வனவு செய்வதில்லை.

விவசாயிகளிடம் நெல் இருக்கிறபோதிலும் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தல் அதிகாரசபையிடம் பணமில்லை எனவும் தெரிவித்தார்.

உளுந்து, கௌபி போன்ற பொருள்களை எங்களது பிரதேசத்தில் உற்பத்தி செய்து வருகிறார்கள். இவற்றை நல்ல விலைக்கு வாங்கக்கூடிய திட்டத்தை அறிமுகஞ் செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கறுவாடு ஏற்றுமதி செய்யப்படும் நிலை தற்போது இல்லை. இதனால், மீனை கறுவாடாக உற்பத்தி செய்யும் விவசாயிகளும் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

மலையக மக்கள் பெரும் சிரமப்படுகிறார்கள். இது தொடர்பில் பெருந்தோட்டத்துறை அமைச்சர் நன்கு அறிவார். யுத்ததுக்குப் பின்னர் தென்னையை பயிரிடாதப் பல பிரதேசங்கள் இருக்கின்றன. இவற்றை தென்னையை மீள பயிரிட முடியும் எனவும் தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்தி சபை முறை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேசியிருந்தார். உண்மையில் இம்முறை ஒரு தோல்வியடைந்த முறை. அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென சொல்கிறார். 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு மேலதிகமான அதிகாரங்களை வழங்குவதற்கு தயார் என பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார். இவ்வாறான நிலையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு வருமென மக்கள் எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள் என்றார்.

இவ்வாறான நிலையில் மாவட்ட அபிவிருத்தி சபை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ஏன் பேசுகிறார் என்பது புரியவில்லை. அதிகளவான இரத்தத்தை விலைக்கொடுத்து சமஷ்டி முறையிலான ஒருதீர்வை நாம் கேட்கிற நிலையிலேயே, ஒன்றுப்பட்ட இலங்கைக்குள் அனைத்து இனங்களும் சுதந்திரமாக ஒற்றுமையாக வாழ வேண்டிய சூழலை உருவாக்கியுள்ளதாக ஜனாதிபதியிருந்தார்.

இவ்வாறான நிலையில் மாவட்ட அபிவிருத்திசபை முறையா தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக வரப்போகிறது? என்கிற அதிர்ச்சி தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இனப் பிரச்சினை விடயத்தில் ஒற்றுமை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லை என்றால் நாம் தீர்வை வழங்கத் தயார் ஆனால் உங்களில் ஒற்றுமை இல்லை எனக் கூறும் வாய்ப்பை தமிழ்த் தரப்பு உருவாக்கி விடக்கூடாது என்றார்.

## ஆடைச் சுற்றறிக்கைகள் இரண்டும் உடன் இரத்து

அதற்கிணங்க, 1989 ஆம் ஆண்டு பெப்ரவரி 1 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை (8/89) அமுலுக்கு வரும் என அமைச்சின் செயலாளர் எம்.எம். பி.கே.மாயாதுன்னே தெரிவித்தார். கொரோனா தொற்று பரவலின்போது, வசதியான ஆடைகளுடன் பணிக்கு வருமாறு அரசாங்க ஊழியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கும் வகையில் 2019 ஜூன் 26 மற்றும் 2022 செப்டம்பர் 27 ஆகிய திகதிகளில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளே இரத்துச் செய்யப்பட்டுள்ளன. கடந்த திங்கட்கிழமை (28) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் எம்.எம். பி.கே.மாயாதுன்னேவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுற்றறிக்கையின் அடிப்படையில் ஆசிரியர்கள் சிலர் இலகு ஆடைகளை அணிந்து பாடசாலைகளுக்கு வந்ததையடுத்து, சர்ச்சைகள் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பயன்படுத்தப்படாத காணிகளை சுவீகரிக்கத் தீர்மானம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாரிய பெருந்தோட்டக் கம்பனிகள் புதிய செடிகளை நடுவதை முற்றாக நிறுத்தியுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். அதற்குப் பதிலாக தற்போதையை பயிர்களைப் பேணுவது அல்லது அந்தக் காணிகளில் உள்ள மரங்களை வெட்டி விற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். மேலும், அரசாங்கத்தின் பொது விடயமொன்றுக்கு சிறிய அளவிலான காணியையோ அவர்கள் வழங்குவதில்லை என அமைச்சர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, இந்தப் பயன்படுத்தப்படாத காணிகளை அரசாங்கத்திற்கு சுவீகரிப்பதற்கு அவசியமான சட்ட வரைபு நடவடிக்கைகளுக்கு தமது தரப்பின் ஆதரவை வழங்குவதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார். அதேபோன்று, பாரியளவிலான பயன்படுத்தப்படாத காணிகளை அரசாங்கத்திற்கு சுவீகரித்து அவற்றை சிறிய அளவிலான தேயிலைக் கைத்தொழிலுக்கு வழங்கி அதன் மூலம் நாட்டின் தேயிலைக் கைத்தொழிலை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் முன்மொழிந்தார்.

அதேபோன்று, தேயிலைக்கான பசளை மற்றும் பூச்சிகொல்லி என்பன சந்தையில் விற்பனை செய்யப்படும் விலை மற்றும் அவற்றின் போதுமான தன்மை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. மேலும், பிரதேச ரீதியாகக் காணப்படும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொடர்பான சிக்கல்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

## மாணவனின் உடலுக்கு தீயை மூட்டியவருக்கு விளக்கமறியல்

அங்கு வந்து சந்தேகநபரை பார்வையிட்ட நீதவான், விளக்கமறியல் உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இம்முறை வெளியான கல்விப்பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளில், ஒன்பது பாடங்களில் ‘ஏ’ சித்தி பெற்ற மாணவன் மீதே, சந்தேகநபர் மண்ணெண்ணெயை ஊற்றி பற்றவைத்துள்ளார்.

## தனியான...

இந்த அனைத்து கம்பனிகளுக்கும் நான்கு பேரே பணிப்பாளர் சபையில் இருக்கின்றன. இவர்கள் தனியான அரசாங்கம் போன்று செயற்படுகின்றனர்.

தோட்டத் தொழிற்சாலைகள் அமைதி தொழிற்சாலைகளாக உள்ளன. தோட்டத் தொழிலாளர்களை வஞ்சிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கு வேறு சட்டங்கள் உள்ளன. பெருந்தோட்ட மக்கள் மன ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தோட்ட நிறுவனங்கள் நாட்டின் சட்டம் மற்றும் தொழிற்சட்டங்களை மீறி செயற்படுகின்றன. இவர்களுக்கு ஜனாதிபதியை விடவும் அதிகாரங்கள் உள்ளன. எவ்வாறாயினும் நாங்கள் பெருந்தோட்டங்களையும், தேயிலைத் துறையையும் பாதுகாக்க வேண்டும் என்றார்.

## சிலிண்டர்கள் வினியோகிக்கப்படும்

நேற்றைய தினம் (31) 6,000 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கியக் கப்பல் ஒன்று துறைமுகத்தை வந்தடைந்தது. அதிலிருந்து எரிவாயுவைத் தரையிறக்கும் பணிகள் நேற்றைய தினமே ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இன்றைய தினம் ஒரு இலட்சம் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்கள் நாடு முழுவதும் விநியோகிக்கப்படவுள்ளதாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நவம்பர் மாதத்துக்கான பணவீக்கமும் வீழ்ச்சி

செப்டெம்பர் மாதத்தில் 69.8 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் ஒக்டோபரில் 66 சதவீதமாக குறைவடைந்த நிலையில், நவம்பர் மாதத்தில் 61 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், ஒக்டோபர் மாதத்தில் 85.6 சதவீதமாக காணப்பட்ட உணவுப் பணவீக்கம் நவம்பர் மாதத்தில் 73.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், உணவு அல்லாத பிரிவில் ஆண்டுக்கு ஆண்டு அளவிடப்படும் பணவீக்கம் ஒக்டோபரில் 56.3% ஆக காணப்பட்டதுடன், நவம்பரில் 54.5% ஆக குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2021 ஒக்டோபரில் இருந்து மேல்நோக்கிய போக்கைப் பின்பற்றிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் பிரதான பணவீக்கம், கடந்த ஒக்டோபரில் முதல் தடவையாக கீழ்நோக்கிய போக்கைக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்ட முதன்மைப் பணவீக்கம், செப்டெம்பரில் 73.7 சதவீதமாக காணப்பட்ட நிலையில், ஒகஸ்டில் 70.6 சதவீதமாக குறைவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்திருந்தது.

## கதைக்கு மறுப்பு

பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்கு நேற்று முன்தினம் (29) பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மாகாண சபைகளில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை (DDC) ஸ்தாபிக்கத் தயார் எனத் தெரிவித்தார்.

அதுதவிர மாகாண சபைகள் கலைப்பு தொடர்பில் ஜனாதிபதி எந்த கருத்தையும் வெளியிடவில்லை.

நிறைவேற்றுத் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடையில் சரியான ஒருங்கிணைப்பைப் பேணுவதற்கான களமாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் செயற்படும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிலைப்பாடாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதன் மூலம், வளர்ச்சிப் பணிகள் முறையாக நடைபெறுவதுடன், நிதி வீண்விரயம் மற்றும் தாமதங்கள் தவிர்க்கப்படும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.எம்.எப்பின் தீர்வுகள் கசப்பாக இருக்கும்

நிதி நல்லிணக்கத்தைப் பேணுவது இன்றியமையாதது, அதற்காக அரசியலமைப்பு ஏற்பாடுகள் போன்ற சட்ட காரணிகளால் நிதி முகாமைத்துவம் ஆதரிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். இலங்கை மத்திய வங்கியை அபிவிருத்தி வங்கியாகக் கருதாது அதன் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்த வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச நாணய நிதியம் ஆதரவளித்தாலும் இல்லாவிட்டாலும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

## சீனா இலங்கையின் ...

பெருந்தோட்ட அமைச்சுக்கு 10.7 பில்லியன் ரூபாவே வரவு -செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. மலையகத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காக இந்த நிதியை பயன்படுத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இந்த மக்களுக்காக நாங்கள் அனைவரும் ஒன்றாக குரல் கொடுக்க வேண்டும்.

வர்த்தகத்துறை அமைச்சுக்கு 5.6 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வடக்கு கிழக்கில் ஏதாவது வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். வடக்கு கிழக்கில் வளங்களை சூறையாடும் செயற்பாடுகளிலேயே உங்களின் கட்சிகளை சேர்ந்தவர்கள் ஈடுபடுகின்றனர். .

உண்மையில் சீனா இலங்கையின் நண்பன் என்றால் இலங்கையின் ' கடன் மறுசீரமைப்புக்கு உதவுமாறு கூறுங்கள். மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு எதிராக வாக்களிப்பதால் சீனா இலங்கையின் ஆதரவாளர் என்று அர்த்தப்படாது. சீனாவில் ஜனநாயகம், மனித உரிமைகள் இல்லை. அங்கு மதச் சுதந்திரம் இல்லை. அதேபோன்ற நாட்டை இலங்கையில் உருவாக்கவா முயற்சிக்கின்றனர். சீனா இலங்கையின் உண்மையான நட்பு நாடு அல்ல. அது மகிந்த ராஜபக்ஷவின் நண்பர் மட்டுமே என்றார்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

சகல பிரதேசங்களிலும்

## விசேட நுகர்வோர் குழுக்கள்

நிர்ணய விலையில் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கல், பொருட்களின் தரம், பொருட்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தித்தல், விலை அதிகரிப்பு தொடர்பில் கவனம் செலுத்துதல், உற்பத்திகளை சந்தைப்படுத்தல், உற்பத்தி செயற்பாடுகளில் நிலவும் சிக்கல்களை தீர்த்து வைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் அனைத்து பிரதேசங்களிலும் விசேட நுகர்வோர் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரித்ததை கவனத்திற் கொண்டு 28 அத்தியாவசிய பொருட்களுக்கான விலைகளை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதற்கிணங்க அரிசி, சீனி, வெள்ளைப்பூடு பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் விலைகள் குறைக்கப்பட்டன. கடந்த காலங்களில் 595 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட சிவப்பு பருப்பு தற்போது 399 ரூபாவாக விலை குறைக்கப்பட்டுள்ளது. வெள்ளைப்பூடு 53 ரூபாவாலும் வெள்ளைச் சீனி 33 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

சந்தையில் அரிசியின் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து வர்த்தக அமைச்சின் கீழ் இயங்கும் அரச வர்த்தக கூட்டத்தாபனத்தின் மூலம் பெருமளவு அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. அதற்கிணங்க இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசியின் விலை குறைக்கப்பட்டு அந்த விலை தொடர்ந்தும் தக்க வைக்கப்பட்டுள்ளது. உணவுத் திணைக்களமானது இக்காலங்களில் பாரிய செயற்திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

அண்மையில் இந்தியா, மலேசியா, சீனா போன்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு நன்கொடையாக கிடைத்துள்ள உணவுப் பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை அந்த திணைக்களம் மேற்கொண்டுள்ளது. அவ்வாறு 40,000 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 500 மெட்ரிக் தொன் பால்மா மற்றும் 500 மெற்றிக் தொன் மருந்துப் பொருட்களும் நாட்டுக்குக் கிடைத்துள்ளன. அவற்றை 2மில்லியன் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஜனாதிபதியின் தம்மபத போதனையில் தவறுள்ளது



பௌத்த தம்மபத தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையே கடந்த 3 நாட்களாக பாராளுமன்றத்தில் சர்ச்சை ஏற்பட்டு வருகின்றது. திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது சஜித் பிரேமதாச, தம்மபதமொன்றுடன் பௌத்த போதனையொன்றை நினைவூட்டி கருத்து தெரிவித்திருந்த நிலையில், செவ்வாய்க்கிழமை உரையாற்றிய ஜனாதிபதி தானும் சில தம்மபத போதனைகளை கூறியிருந்தார்.

இதனை தொடர்ந்து மீண்டும் நேற்று (30) அது தொடர்பில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஜனாதிபதியின் தம்மபத போதனையின் போது கூறிய கருத்தில் தவறுகள் இருப்பதாகசுட்டிக்காட்டியிருந்தார். அரசியலமைப்பில் பௌத்த மதம் தொடர்பில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் சில விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்க வேண்டியுள்ளது. அதில் பாராபர சூத்திரம், வசர சூத்திரம் ஆகியவற்றில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த சூத்திரங்கள் தொடர்பில் நான் சில விடயங்களை குறிப்பிட்டிருந்தேன். அதில் தேரர்களுக்கு எதிராக பேசுவது தவறு என்பதனை சுட்டிக்காட்டியிருந்தேன்.

அவர் அங்குலிமால என்பவர் காவி உடையில் கௌதம புத்தருக்கு எதிராக செயற்பட்டவர் என்று கூறினார். அது தவறானது. அதனை நான் சரியாக கூறுகின்றேன் என்றார்.

பெருந்தோட்டங்களை காப்பாற்ற

## திகாவின் யோசனை

காணிகளை பகிர்ந்தளித்து பெருந்தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்கினாலே பெருந்தோட்டங்களை காப்பாற்றிக்கொள்ள முடியும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இந்திய வம்சாவளி மக்கள் இங்கே வந்து 200 வருடங்கள் கடந்துள்ளன. இதன்படி 15 இலட்சம் வரையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களில் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் பேர் தோட்டத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். அந்த மக்களின் வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் கிடையாது. நல்லாட்சி அரசாங்கத்தில் மாற்றங்களை கொண்டு வர நடவடிக்கை எடுத்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம். ஆனால் இப்போது அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாது போனது.

இன்று தோட்டக் கம்பனிகள் வருமானத்தை மாத்திரம் இலக்காக கொண்டு செயற்படுகின்றன என்றார்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல்

# நட்டஈடு 3 பில்லியனாக குறைந்தது

இலங்கைக் கடற்பரப்புக்குள் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய 7 பில்லியன் டொலர் நட்டஈடு தற்போது 3 பில்லியன் டொலர்களாகியுள்ளதாக தெரிவிக்கும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ, டொலர்களாகப் பெறப்பட வேண்டிய இந்த நட்டஈட்டை இலங்கை ரூபாயில் பெற்றுக்கொள்ள சட்டமா அதிபர் திணைக்களம் இணங்கியுள்ளதாகவும் தெரிவத்தார்.



பாராளுமன்றத்தின் நேற்றைய (30) அமர்வில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் தீப்பற்றியதன் பின்னர் நீர்கொழும்பிலிருந்து பாணந்துறை வரையிலான 65 கிலோ மீற்றர் கடற் பிரதேசத்தில் கடற்றொழிலையை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டிருந்தது. மேல் மாகாணத்துக்கு மாத்திரமல்லாது வடமேல் மாகாணத்தின் எனது மாவட்டமான புத்தளத்துக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன என்றார். கம்பஹாவில் 11,091 குடும்பங்களும், கொழும்பில் 3250 குடும்பங்களும், களுத்துறை 701 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கடற்றொழில் அமைச்சால் அமைக்கப்பட்ட குழுவின் ஊடாக நட்டஈடாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொருவரின் நாளாந்த வருமானம், மீன்பிடிக்கு விதிக்கப்பட்ட தடைக்காலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த நட்டஈடாக மதிப்பீடு செய்யப்பட்டது என்றார்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களமே நடவடிக்கை எடுத்து வருகிறது. இக்கப்பலில் இருந்து கிடைக்க வேண்டிய நட்டஈட்டை டொலர்களில் செலுத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருந்தது. ஆனால், நாடு நெருக்கடி நிலைமைகளுக்கு முகங்கொடுத்திருக்கும் போது இந்த நட்டஈட்டு தொகையை இலங்கை ரூபாயில் பெற்றுக்கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் இணங்கியிருக்கிறது என்றார். இன்னும் பாரியளவான நட்டஈட்டை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் நட்டஈடாக 7 பில்லியன் டொலர்களை பெற வேண்டுமென பேசப்பட்டது. ஆனால் தற்போது அது 3 பில்லியன் டொலர்களாகியுள்ளது. இது தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். இதுவொரு குற்றவியல் செயற்பாடு. விரைவாக சட்டமா அதிபர் திணைக்களம் வழக்கு தொடர வேண்டும் என்றார்.

நியாயமான சம்பளம் இல்லை என்றால்

## அடுத்த வருடம் கூட்டுத் தொழிற்சங்க போராட்டம்

### கம்பனிகளை எச்சரிக்கும் இ.தொ.கா

பெருந்தோட்டக் கம்பனிகளால் பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. ஜனவரிக்குப் பின்னர் நியாயமான சம்பளம் ஒன்றை பெருந்தோட்ட கம்பனிகள் வழங்கவில்லை என்றால் கூட்டுத் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கத் தயாராகி வருகிறோம் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் சபையில் தெரிவித்தார்.

பெருந்தோட்ட அமைச்சின் ஊடாக பெருந்தோட்ட மக்களுக்கு பல நன்மைகள் கிடைத்தாலும், பெருந்தோட்ட நிறுவனங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டதன் பின்னர் அம்மக்கள் படும் துன்பங்கள் அனைவரும் அறிந்ததே. அரசாங்கம் பெருந்தோட்டங்களை கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கியதைத் தொடர்ந்து அவர்கள் வேறொரு நாட்டில் இயங்கி வருவதுபோல இயங்கி வருகிறார்கள். 1000 ரூபாய் சம்பளத்தை வழங்க வேண்டுமென அரசாங்கம் அறிவித்த பின்னரும் அதற்கு எதிராக கம்பனிகள் உயர்நீதிமன்றத்துக்கு சென்றிருந்தது. தற்போதைய வாழ்க்கை செலவுக்கு ஏற்ப பெருந்தோட்ட மக்களுக்கு ஆயிரம் ரூபாய் போதாது. இவ்வாறான நிலையில் பெருந்தோட்ட நிறுவனங்கள் சில ஆயிரம் ரூபாயை வழங்குவதுமில்லை. பெருந்தோட்ட நிறுவனங்கள் நல்ல இலாபத்தை ஈட்டி வருகிறார்கள். இவ்வாறு இலாபத்தை பெறும் பெருந்தோட்டக் கம்பனிகள் அத்தோட்ட மக்களுக்கு எதனையும் செய்வதில்லை. அம்மக்களுக்கு தேவையான வீதி, வீடு, மின்சாரம் போன்ற அபிவிருத்திகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்றே எதிர்பார்க்கிறது என்றார்.



தேயிலை கொழுந்து கிலோ ஒன்றுக்கு தற்போது 400 ரூபாய் வரையில் வழங்கப்படுகிறது. ஆனால் தொழிலாளர் எடுக்கும் மேலதிகக் கொழுந்துக்கு 40-50 ரூபாய்க்கு மேலதிகமாக வழங்கியதில்லை எனவும் தெரிவித்தார். பெருந்தோட்டங்களில் காணப்படும் அதிகளவான தரிசு நிலங்கள் உள்ளன. அவற்றில் கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிக்க வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் கடந்த காலங்களில் இயங்கினாலும் தற்போது அவை இயங்குவதில்லை. எனவே, மீள் அவற்றை இயங்க வைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பெருந்தோட்டக் காணிகள் அரசாங்கத்துக்கு சொந்தமானவை. இவற்றை குத்தகைக்கே அரசாங்கம் வழங்கியுள்ளது. ஆனால் இக்காணிகளை பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளுக்கு கம்பனிகள் வழங்கியதில்லை. ஆனால் வெளியில் இருந்து வருபவர்களுக்கு தேயிலைகளை பிடிங்கி எரிந்துவிட்டு நிலங்களை வழங்கும் நிலையே காணப்படுகிறது என்றார்.

நிதிக் கட்டமைப்பை மாத்திரம் பாதுகாத்தால்

## நெருக்கடிக்கு தீர்வு கிடைக்காது

புதிய திட்டங்களை உருவாக்கும் வகையில் வங்கி கட்டமைப்பின் செயற்பாடுகள் அமையவில்லை. அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்ளும் புதிய திட்டங்களை பாடசாலை மாணவர்களிடம் கேட்டால் அவர்கள் சிறந்த பல திட்டங்களை முன்வைப்பார்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாட்டின் நிதிக் கட்டமைப்பை பாதுகாக்க மத்திய வங்கி கடினமான தீர்மானங்களை அமல்படுத்தியுள்ளது. வங்கி வட்டி வீதத்தை 30 சதவீதத்தால் உயர்த்தும் போது சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் தொழிற்துறை முழுமையாக பாதிக்கப்படும். வாடிக்கையாள்களின் தொழிற்துறை முன்னேற்றமடைந்தால் தான் வங்கி கட்டமைப்பு சீராக இயங்கும் என்பதை மத்திய வங்கி விளங்கிக் கொள்ள வேண்டும்.

நிதி தொடர்பான தீர்மானங்களை மத்திய வங்கி தனித்து எடுக்கிறது. மறுபுறம் நிதியமைச்சு பிறிதொரு தீர்மானத்தை எடுக்கிறது. நாட்டின் கைத்தொழில்துறை பாதுகாக்க கொள்கை ரீதியில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பொருளாதார நிபுணர்கள் நிதி கட்டமைப்பை பாதுகாப்பது குறித்து மாத்திரம் அவதானம் செலுத்தியுள்ளார்கள். நிதிக் கட்டமைப்பை மாத்திரம் பாதுகாத்து பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது. புதிய திட்டங்களை உருவாக்கும் வகையில் வங்கி கட்டமைப்பின் செயற்பாடுகள் அமையவில்லை என்றார்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின்

## சி.சி.டிவி காட்சிகள் அழிக்கப்பட்டுள்ளன



எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலை இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன்போது கப்பல் தரித்திருந்த இடத்திலிருந்து துறைமுகத்துக்குள் வரும் வரையிலான சி.சி.டிவி காட்சிகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டுள்ளன. நீதவான் விசாரணைகளில் இது வெளிப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (30) அமர்வில் கலந்துகொண்டு எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் தொடர்பில் சபையில் உரையாற்றிய கிரியெல்ல எம்.பி, இந்த சி.சி.டிவி காட்சிகள் அழிக்கப்பட்டதால் இக் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் நட்டஈட்டை பெறுவதில் பிரச்சினை எழுந்துள்ளது எனவும் கூறினார்.

இதன்போது குறுக்கீடு செய்த இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ, சி.சி.டிவி காட்சிகள் அழிக்கப்பட்டுள்ளது உண்மை என உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்த கிரியெல்ல, அரசாங்கமே இந்த சி.சி.டிவி காட்சிகளை அழித்துள்ளது என்றார். சி.சி.டிவி காட்சிகள் அழிக்கப்பட்டுள்ளமை உண்மை. ஆனால் இது தொடர்பில் வழக்கு தொடர வேண்டும். அப்போதுதான் நடவடிக்கை எடுக்கப்பட முடியும். எனவே சட்டமா அதிபர் இது தொடர்பில் வரைவில் வழக்கு தொடர வேண்டும். குறைந்தது 3, 4 பில்லியன் டொலர்களையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ தெரிவித்தார்.

## 2023 முதல் காலாண்டுக்குள் உரப் பற்றாக்குறைக்கு தீர்வு

எமது அரசு அரசியல் ரீதியில் எடுத்த ஒரு சில தீர்மானங்கள் தேயிலை தொழிற்துறை உட்பட பெருந்தோட்டத்துறையை பாதித்துள்ளது. எனவே 2023 ஆம் ஆண்டு முதல் காலப்பகுதிக்குள் உரப் பற்றாக்குறைக்கு தீர்வு வழங்கப்படும் என பெருந்தோட்டத்துறை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பதிரன தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிற்துறை கடந்த இரண்டு வருட காலமாக உர பற்றாக்குறையால் உரிய இலக்கை அடையவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறோம். நெருக்கடியான சூழ்நிலையில் பெருந்தோட்டத் தொழிற்துறை உற்பத்திகள் ஒப்பீட்டளவில் முன்னேற்றமடைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டு பெருந்தோட்டத்துறை உற்பத்தி ஏற்றுமதிகள் ஊடாக 3.8 பில்லியன் டொலர் வருமானம் கிடைத்தது. தேயிலை ஏற்றுமதியினால் 1.3 பில்லியன் டொலர்களும், இறப்பர் உற்பத்தி ஏற்றுமதி ஊடாக 1.4 பில்லியன் டொலர்களும், தெங்கு மற்றும் தெங்கு சார் உற்பத்தி ஏற்றுமதி ஊடாக 836 மில்லியன் டொலர்களும், கருவாப்பட்டை மற்றும் சிறு ஏற்றுமதி பயிர் ஊடாக 456 மில்லியன் டொலர்களும் ஏற்றுமதி வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளன. தெரிவு செய்யப்பட்ட பயிர்ச்செய்கைகளுக்காக உரம் மீதான தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது, கிளைபோசெட் உரம் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. உர பற்றாக்குறைக்கு 2023 ஆம் ஆண்டு முதல் காலப்பகுதிக்குள் தீர்வு வழங்கப்படும். தேசிய உற்பத்திகளை மேம்படுத்தினால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும் என்றார்.

நல்லூர் பிரதேச சபையில்

# 2023 பட்ஜெட் நிறைவேறியது

■ எஸ்.நிதர்ஷன், என்.ராஜ்

யாழ்ப்பாணம் - நல்லூர் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஆளுகைக்குட்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தவிசாளர் ப.மயூரனால் சபையில் புதன்கிழமை (30) சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் 3 உறுப்பினர்கள், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 3 உறுப்பினர்கள், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 4 உறுப்பினர்கள், சுயேச்சை குழுவின் 2 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலா ஒரு உறுப்பினர் என 15 உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதே வேளை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸின்



2 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

20 உறுப்பினர்களை கொண்ட நல்லூர் பிரதேச சபையில், இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் 6 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் 5 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி சார்பில் 4 உறுப்பினர்களும், சுயேட்சை குழு சார்பில் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் தலா ஒரு உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



## சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு

■ எம்.றொசாந்த்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவத் தலைவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் புதன்கிழமை (30) காலை நடைபெற்றது.

இதன்போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பொறுப்புகள்,தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரியின் கடமைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தெளிவூட்டப்பட்டது.



## கசிப்புடன் பெண் கைது

■ செந்தூரன் பிரதீபன்

தெல்லிப்பளை கிழக்கு பகுதியில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கை ஈடுபட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெல்லிப்பளை குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

உப பொலிஸ் பரிசோதகர் முருகேசன் பிள்ளை கலாவினோதன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 8.250 லீற்றர் கசிப்பு, 150 லீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

வீட்டின் பின்புறத்தில் மிகவும் சூட்சுமமான முறையில் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட நிலையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், குறித்த பெண்ணை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தனர்.

## மணல் கடத்தலை தடுத்த இளைஞர் மீது தாக்குதல்

■ எஸ்.தில்லைநாதன்

சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்தி, மணல் கடத்த முயன்ற ஒருவரை பிடித்து விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைத்த இளைஞர் ஒருவர் மணல் அகழ்வு கும்பலால் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வலிக்கண்டி, குடத்தனை மேற்கைச் சேர்ந்த 19 வயதுடைய பவானந்தராசா தரிசியன் என்ற இளைஞரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை(28) இரவு 9 மணியளவில் வலிக்கண்டிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாகனம் ஒன்று மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்தது.

இரண்டாவது முறையாக மணல் அள்ளிச்செல்ல வந்த நிலையிலேயே கிராம இளைஞர்களால் வாகன உரிமையாளர் பிடிக்கப்பட்டு விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட வாகன உரிமையாளர், இளைஞர்கள் சிலரும் இணைந்து, செவ்வாய்க்கிழமை(29) காலை 10 மணியளவில் வலிக்கண்டிப் பகுதிக்கு சென்று இளைஞர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன், அஞ்சுறுத்தலும் விடுத்துள்ளார்.

## வீட்டில் ஹெரோயின் பொதி செய்தவர் கைது

■ செந்தூரன் பிரதீபன், எஸ் தில்லைநாதன்

யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் 56 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 1.56 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப் பொருள் தடுப்பு பிரிவு மற்றும் இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வீட்டில் வைத்து ஹெரோயினை சிறிய பக்கெட்டுகளில் அடைத்துக் கொண்டிருந்த 24 வயது நபரே கைதாகியுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## காலாவதியான பொருள் விற்ற 12 வியாபாரிகளுக்கு தண்டம்

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பலசரக்கு கடைகளில்

காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த 12 உரிமையாளர்களுக்கு 3 இலட்சத்து 5

ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்து, யாழ். மேலதிக நீதவான் எஸ்.நளினி, புதன்கிழமை (30) உத்தரவிட்டார்.

யாழ் நகர் பகுதியில் 06 பலசரக்கு கடைகள், குருநகர் பகுதியில் 05 பலசரக்கு கடைகள் மற்றும்

வண்ணார் பண்ணையில் ஒரு கடை நடத்திய கடைகளின் உரிமையாளர்களுக்கு பொது சுகாதார

பரிசோதகர்களால், யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு இன்றைய தினம் புதன்கிழமை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது,

12 வர்த்தகர்களும் தமக்கு எதிரான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர்.

அதனையடுத்து, 12 பேருக்கும் 3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த மேலதிக நீதவான்,

சான்று பொருட்களாக மன்றில் ஒப்படைக்கப்பட்ட காலாவதியான பொருட்களை அழிக்குமாறும் உத்தரவிட்டார்.

## கொள்ளையிட முயன்ற அறுவர் நையப்புடைப்பு

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் வீடொன்றை உடைத்து கொள்ளையிட முயன்ற யாழ். சங்கானை பகுதியை சேர்ந்த ஐவர் மற்றும் புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை பகுதியை சேர்ந்த ஒருவர் உட்பட அறுவரை பிடித்த பிரதேச இளைஞர்கள் அவர்களை நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை அதிகாலை, வீட்டுக்குள் புகுந்து கொள்ளையிட முயன்றபோது, உரிமையாளர் எழுந்து சத்தமிட்டதையடுத்து, அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

அதிகாலை 2.30 மணி முதல் காலை 6.00 மணிவரை 8 ஆம் வட்டார இளைஞர்களுடன் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் ஏனைய கிராமத்தினை சேர்ந்த இளைஞர்களும் தேடுதல் நடத்தியபோது மூன்று திருடர்கள் மந்துவில் பகுதியில் வைத்து இளைஞர்களால் மடக்கிபிடித்து கொள்ளையர்கள் பிடிபட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து கத்தி, கோடரி போன்ற கூரிய ஆயுதங்களும் மீட்கப்பட்ட நிலையில் கொள்ளையர்களை வீதியில் இழுத்து வைத்து நையப்புடைத்துவிட்டு புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்று

# மட்டு. கல்வி வயலம் வரலாற்றுச் சாதனை

### கிழக்கு மாகாணம் 4ஆம் இடத்துக்கு முன்னேற்றம்

■ வி.ரி.சகாதேவராஜா, வ.சக்தி

அண்மையில் வெளியான 2021 க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி தேசிய நிலைப்படுத்தலில் கிழக்கு மாகாணம் நான்காம் இடத்துக்கு முன்னேறியுள்ளதுடன், அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்று மட்டக்களப்பு கல்வி வலயம் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் இருந்து குறித்த பரீட்சைக்கு



2,056 மாணவர்கள் தேற்றியிருந்த நிலையில், 1,789 மாணவர்கள் க.பொ.த.உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, கடந்த வருடம் எட்டாம் நிலையில் இருந்த கிழக்கு மாகாணம், இம்முறை நான்காம் இடத்திற்கு முன்னேறியிருப்பது மகிழ்ச்சியான செய்தி என கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

பரீட்சை திணைக்களத்தின் தேசிய ரீதியிலான பகுப்பாய்வு வெளியான நிலையில் மேற்படி கருத்தை தெரிவித்ததுடன், தேசிய ரீதியில் 100 வலயங்களிலே மட்டக்களப்பு வலயம் முதலிடத்தை பெற்று மாகாணத்துக்கு பெருமை சேர்த்துள்ளது என்றார்.

## நுகர்வோர் அதிகார சபையின் சுற்றிவளைப்பு இன்று ஆரம்பம்

■ கனகராசா சரவணன்

புதுவருட பண்டிகை காலத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட நுகர்வேர் அதிகாரசபையால் இன்று வியாழக்கிழமை (01) முதல் எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி வரை வர்த்தக நிலையங்களை முற்றுகையிட்டு விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக மாவட்ட நுகர்வேர் அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.எப்.அன்வர் சதாத் தெரிவித்தார்.

வருட கடைசியில் காலாவதியாகும் மனித பாவனைக்கு உதவாத பொருட்களை விற்பனை செய்வதையும் அரச கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்வதை தடுப்பதற்காக இந்த சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இரு குழுக்களாக மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் இந்த விசேட சுற்றிவளைப்பு சோதனை நடத்தப்படும் என்றார்.

## காரைதீவில்16 வீடுகளுக்கு சிவப்பு அறிவித்தல்

■ வி.ரி. சகாதேவராஜா



காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லீமா வசீர் தலைமையில் காரைதீவு - 12 மற்றும் மாளிகைக்காடு பிரதேசத்தில் விசேட டெங்கு கள பரிசோதனை செவ்வாய்க்கிழமை (29) நடைபெற்றது.

469 வீடுகளில் பரிசோதனை செய்யப்பட்டதுடன், டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை வைத்திருந்த 16 வீடுகளுக்கு சிவப்பு அறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நுளம்பு கள தடுப்பு பிரிவினர்கள், காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் டெங்கு தடுப்பு பரிசோதனையில் கலந்து கொண்டனர்.

## சீனிபுர விவசாயிகள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

■ எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் நீர்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட சீனி புர பகுதியில் பெரும்போக வேளாண்மை மழையின்றி பாதிப்படைவது குறித்து விவசாயிகள் கந்தளாய் பிரதேச செயலகத்துக்கு முன்னால் புதன்கிழமை (30 ) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டதோடு, விவசாயத்துக்கு தேவையான நீரினை திறந்து விடுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் விவசாயத்தை வளப்படுத்து, நீரை திறந்து விடு,பசளையை வழங்கு,போன்ற பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

வயல் விதைத்து பதினைந்து இருபது நாளாகியும் இதுவரை மழையும் இல்லை நீரும் திறந்து தரப்படவில்லை என்றும் வரட்சி தொடருமானால் தங்கள் பணம் மண்ணோடு மண்ணாகிவிடும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

கந்தளாய் குளத்தின் நீரைதிறந்து தருமாறு கந்தளாய் பிரதேச உப செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் விவசாயிகள் கையளித்தனர்.





## மட்டக்களப்பில் சமாதான மாநாடு

■ வ.சக்தி

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட மதத் தலைவர்கள், இளைஞர் யுவதிகளுக்கான சமாதானம் தொடர்பான மாநாடு ஒன்று மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் புதன்கிழமை(30) நடைபெற்றது.

இதன்போது திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொலன்னறுவை, மாவட்டங்களிலுள்ள, இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், மற்றும் பௌத்த மதத் தலைவர்கள், தமிழ், முஸ்லிம், மற்றும் சிங்கள இளைஞர் யுவதிகள், உள்ளடங்கலாக சுமார் 100 பேர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

காலையில் மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து மாநாடு நடைபெறும் விடுதி வரைக்கும் சமாதானத்தை முன்நிறுத்தி நடைபவனி ஒன்று இடம்பெற்று, பின்னர் சமாதானம் தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்கும் மாநாடு இடம்பெற்றது.

இதன்போது இன, மத சகவாழ்வு, மற்றும் பொருளாதார வளர்ச்சி, தொடர்பிலும், கலந்து கொண்ட அனைத்து இளைஞர் யுவதிகள், மற்றும் மதத் தலைவர்களின் கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன், மனித உரிமை ஆர்வலர் அருண் சிவஞானம், மற்றும் தேசிய சமாதானப் பேரவையின் உதவித்திட்ட முகாமையாளர் ரசிக்க செனவிரத்ன ஆகியோர் வளவாளராகக் கலந்து கொண்டு விளக்கங்களை வளங்கினர்.



## வீதியோர மீன் வியாபாரத்தை தடுத்தமைக்கு எதிர்ப்பு

■ வ.சக்தி

மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட வீதியோரங்களில் மீன் வியாபாரிகள் மீன் விற்பனை செய்வதை நிறுத்துமாறு பிரதேச சபை ஞாயிற்றுக்கிழமை(27) அறிவித்தமையைக் கண்டித்து, வியாபாரிகளால் செவ்வாய்க்கிழமை(29) எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அப்பகுதியிலுள்ள மீன் வியாபாரிகள், மீன் பெட்டிகளுடன் களுதாவளையில் அமைந்துள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் முன்னால் செவ்வாய்க்கிழமை(29) எதிர்ப்பு நடவடிகையில் ஈடுபட்டனர்.

பொதுச் சந்தைகளில் வியாபாரத்தில் ஈடுபடும் மீன் வியாபாரிகள் மாலை 2 மணிக்குப் பின்னர் வீதியோரங்களில் மீன் வியாபாரத்தில் ஈடுபடலாம் என்ற சபைத் தீர்மானத்தை தாம் ஏற்கனவே எடுத்துள்ளதாக குறித்த பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ் அங்கு தெரிவித்தார்.

எனினும் தமது மேல் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் வீதியோரங்களில் மேற்கொள்ளப்படும் மீன் வியாபாரங்களைத் தடை செய்துள்ளதாக மீன் வியாபாரிகளிடம் பிரதேச சபையின் செயலாளர் எஸ். அறிவழகன் அங்கு தெரிவித்தார்.



# 64 அடி பாய்ந்து காங்கிரஸ் தாக்கும்

## பாரத் எச்சரிக்கை

■ டி.எஸ்.கணேசன்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸை அச்சுறுத்தல்கள் மூலம் அடிபணிய வைக்கமுடியாது என தெரிவித்த, காங்கிரஸின் உப தலைவரான பாரத் அருள்சாமி அது வெறும் பகல் கனவு மாத்திரமேயாகும். மக்களுக்காக எந்த மட்டத்தில் இறங்கியும் - அதாவது 8 அடி அல்ல 64 அடி பாய்ந்தேனும் 'அரசியல்', 'தொழிற்சங்க' தாக்குதலை தொடுப்பதற்கு காங்கிரஸ் தயார் என்றார்.

ஹட்டனில் நேற்று (30) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, சமகால அரசியல் மற்றும் தொழிற்சங்க விவகாரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே பாரத் அருள்சாமி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்த அவர்,

நாட்டில் உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம் அதிகரித்துள்ளது. உலகில் உணவுக்கான பணவீக்க பட்டியலில் இலங்கை ஆறாவது இடத்தில் உள்ளது. அதேபோல மருந்து தட்டுப்பாடும் நிலவுகின்றது. இவ்விரு பிரச்சினைகளும் மலையகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை.

எனவே, இவ்விவகாரங்கள் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்ட குழுவினர், ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர். இதன்போது எமது மக்களுக்கான நிவாரண திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்படும். அதேபோல எமது மக்களுக்கான தற்காப்பு பொருளாதார திட்டங்கள் சம்பந்தமாகவும் யோசனைகள் முன்வைக்கப்படும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி, ஒரு சிலர் சுற்றுலா விசாவில் புலம்பெயர் தொழிலாளர்களாக செல்கின்றனர். ஆட்கடத்தலில் ஈடுபடும் ஒரு சில விசமிகள் எமது சமூகத்திலும் உள்ளனர். எனவே, வெளிநாடு செல்ல இருப்போர் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களையே நாட வேண்டும். இது சம்பந்தமாக தோட்ட வாரியாக எமது இளைஞர், மகளிர் அமைப்புகள் ஊடாக விழிப்புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

எங்களின் பெருந்தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்திலும் சரி, தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலத்திலும் சரி, தற்போதைய தலைமைத்துவத்தின் கீழும் சரி, மக்களுக்கான அரசியல், தொழிற்சங்க பயணத்தையே காங்கிரஸ் முன்னெடுக்கின்றது.

மக்கள் நலனே எமக்கு முக்கியம். மக்களுக்கு எதிரான சக்திகளுக்கு தக்க பாடங்களை புகட்டியுள்ளோம். அச்சுறுத்தல்கள் மூலம் காங்கிரஸை அடிபணிய வைக்க முடியாது. மக்களுக்காக எட்டு அடி அல்ல 64 அடிகூட பாய்ந்து, அரசியல், தொழிற்சங்க தாக்குதலை நடத்த காங்கிரஸ் தயார் என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன்." - என்றார்.

### சென்மாக்ரட் தோட்ட மக்கள்

# பத்து வருடங்களாக குடிநீர் இன்றி அவதி

■ ஆ.ரமேஸ்

உடப்புஸ்ஸலாவை - சென்மாக்ரட் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த பத்து வருடங்களாக அன்றாட தேவைக்கான குடி நீரைப் பெற்றுக் கொள்வதில் பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

இத் தோட்டத்தில் 175 தொழிலாளர் குடும்பங்கள் வசிக்கின்ற போதிலும் இதில் 92 குடும்பங்களுக்கு முறையாக குடிநீர் வசதியில்லை என பாதிக்கப்பட்ட தொழிலாளர் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

இவர்களுக்கு குடிநீர வழங்க 1990 ஆம் ஆண்டு (MTIP) சமூக நிறுவனம் ஊடாக பிரதான குடிநீர் தாங்கி ஒன்று நிர்மாணிக்க பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அப்பணிகள் 1991 ஆம் ஆண்டு முடிவு பெற்று, பொது பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

30 வருடங்களாக குறித்த தண்ணீர் தாங்கி ஊடாக தொழிலாளர்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 10 வருடங்களாக இந்த தண்ணீர் தாங்கி தோட்ட நிர்வாகத்தால் முறையாக பராமரிக்கப்படாமல், குடிநீருக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, சென்மாக்ரட் புதிய கிராமத்தில் வசிக்கும் 83 குடும்பங்களுக்கு "பாம்" நிறுவனம் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோகம் சீராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தோட்ட நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள போதிலும் உரிய நடவடிக்கையை எடுக்க தோட்ட நிர்வாகம் முன்வருவதாக இல்லை என்றும் தெரிவிக்கின்றனர்.










## வைத்திய உபகரணங்கள் வழங்கப்பட்டன

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்தி குழுவும் நுவரெலியா வை எம் எம் ஏ அமைப்பும் இணைந்து, நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்கள் நேற்று (30)புதன்கிழமை வழங்கி வைத்தன. இவ் வைபவத்தில் நுவரெலியா பொது வைத்தியசாலை இயக்குனர் வைத்தியர் மகேந்திர செனவிரட்ன, வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் பிரியந்த, வைத்தியசாலை அபிவிருத்தி குழ தலைவர் பி.மகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்துக்கொண்டனர்.

(எஸ்.கே. குமார்)

### அக்கரப்பத்தனை பெருந்தோட்ட விவகாரம்

# தொழில் அமைச்சருடன் காங்கிரஸ் கடும் பேச்சு



அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கைக்கு தீர்வு காணும் நோக்கில், தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் தொழில் அமைச்சில் நேற்று (30) இடம்பெற்றது.

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்திற்கு கீழ் இயங்கும் தோட்டங்களில், தோட்ட நிர்வாகம் தொழிலாளர் சட்டத்தை மீறுவதுடன், தொழிலாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் குற்றம் சாட்டினார்.

மேலும் அனைத்து தோட்டங்களிலும் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப் பெற்றால் மாத்திரம் தோட்ட நிர்வாகம் வழமைபோல் செயற்படுவதற்கு இ.தொ.கா ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தெரிவித்தார்.

அக்கரப்பத்தன பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் பணிபுரியும் 10,000 தோட்ட தொழிலாளர்கள் வழமைபோல் செயற்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும், இ.தொ.கா சுட்டிக்காட்டிய தொழிலாளர் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தொழில் திணைக்களத்துக்கு அமைச்சர் மனுஷ நாணயக்கார பணிப்புரை விடுத்தார்.

### உயர்தரத்தில் சிறப்பு சித்திப்பெற்ற

# மாணவர்கள் 16 பேர் கௌரவிப்பு

■ மஹேஸ் கீர்த்திரத்ன



கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி மாத்தளை மாவட்டத்தில் அதிகூடிய சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே தலைமையில் நடைபெற்றது.

கடந்த வருடம் மாவட்டத்தில் முதலாம், இரண்டாம்,மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களான மாத்தளை சென் தோமஸ், ஸ்ரீ சங்கமித்தா பெண்கள், தங்கந்த மகா வித்தியாலயம், கலேவெல மத்திய மகா வித்தியாலயம் மற்றும் வித்யா விதுஹல ஆகிய பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 16 பேருக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# பிரதேச ஊடகவியலாளர் ஒருவருக்கு அச்சுறுத்தல்

■ செ.தி.பெருமாள்.

பொகவந்தலாவை- கெர்கஸ்வோல்ட் தோட்ட நிர்வாகத்தினர் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தோட்ட தலைவரால் ஊடகவியலாளர் ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தில் நேற்று (30) முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவைப் பிரதேசத்தைச் சேர்ந்த பிராந்திய ஊடகவியலாளரான சாம்பசிவம் சதீஸ்குமாருக்கே இவ்வாறு அச்சறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொகவந்தலாவை கெர்கஸ்வோல்ட் தோட்ட நிர்வாகத்தினரால் தோட்ட மக்களின் அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட மனித உரிமைகள், தொழில் உரிமைகள் மீறப்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

குறிப்பாக கெர்கஸ்வோல்ட் மத்திய பிரிவில் உள்ள பொதுமக்கள் குடிநீருக்குப் பயன்படுத்தும் நீர்த்தாங்கியை சுத்தம் செய்து தருமாறு தோட்ட நிர்வாகத்திடம் மக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.

இந்நிலையில், இதனை சுத்தம் செய்துத் தரமுடியாது. அதனை சுத்தம் செய்யும் பணிகளுக்கு தோட்ட நிர்வாகத்தின் செலவில் தொழிலாளர்களை வழங்க முடியாது. இது தொடர்போன்ற பிரச்சினைகள் தொடர்ந்து வருமாக இருந்தால் குறித்த நீர்தாங்கியை மூடிவிடுவேன் என கெர்கஸ்வோல்ட் தோட்ட உதவி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தோட்ட உதவி முகாமையாளருடன் கலந்துரையாடி குறித்த நீர்த்தாங்கியை மூட வேண்டாமென கோரிக்கை விடுப்பதற்காக பொதுமக்கள் சென்றுள்ளனர். இதன்போது தோட்ட உதவி முகாமையாளர் ஊடகவியலாளர் சதீஸ்குமார் தொடர்பில் பொதுமக்களிடம் அவரது நற்பெயருக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் பல்வேறு விடயங்களைக் கூறி, அச்சுறுத்தியுள்ளதாக அறியமுடிகின்றது.

### ப்ரௌன்ஸ்வீக்கில்

# தேயிலை தூள் களவு

■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா- ப்ரௌன்ஸ்வீக் தேயிலை தொழிற்சாலையில் நேற்று முன்தினம் (29) இரவு பாரியளவு தேயிலைத் தூள் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தோட்ட முகாமையாளர் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யசரத்ன பண்டார தெரிவித்தார்.

இதனையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு கடமையில் புரியும் காவலாளிகள் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரிவோரிடம் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

எனினும், இதுவரை சந்தேக நபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன், விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



### மஸ்கெலியா பிரதேச குடியிருப்புகள், கடைகளுக்கு

# காணி உறுதிப்பத்திரம் வழங்க கலந்துரையாடல்

■ ஆ.ரமேஸ்

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட மஸ்கெலியா நகரை அண்டிய மக்கள் குடியிருப்புகள், கடைத்தொகுதிகளுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மஸ்கெலியா நகரை அண்டிய மக்கள் குடியிருப்புகள், கடைத்தொகுதிகளுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குவது நீண்ட காலமாக இழுபறி நிலை இருந்து வந்தது. இது தொடர்பில் நுவரெலியா மாவட்ட அரசாங்க செயலாளர் நந்தன கலபட மற்றும் அம்பகமுவ பிரதேச செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டதாகவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக காணி அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ கலந்துரையாடியதாகத் தெரிவித்த அவர், இது தொடர்பான தகவல்களைத் திரட்டி சமர்ப்பித்ததன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்றுவருகின்றது என்றார்.

# அதிக இலாபத்தை ஈட்டுவதாக தெரிவிப்பு

■ சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தற்போது கூடிய இலாபத்தினை பெற்று வருகிறது என்று சப்ரகமுவ மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ரம்மியகுமார வீரசிங்க தெரிவித்தார்.

இரத்தினபுரி புதிய நகரில் நேற்று முன்தினம் (29) நடை ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,




சப்ரகமுவ மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் இயங்கும் தனியார் பஸ் வண்டிகளில் இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகளை இனங்கண்டு, பயணிகளிடம் அது குறித்து கேட்டறிந்து, முறையான சட்டத்தை முன் வைத்து பயணிகளுக்கு சிறந்த சேவையை பெற்று கொடுப்பதாகவும் இதன் காரணமாக சப்ரகமுவ மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை கூடிய இலாபத்தை பெற்று வருகின்றது.

கடந்த காலங்களில் சப்ரகமுவ மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் ஏற்பட்ட ஊழல் மோசடி காரணமாக, மாதமொன்றுக்கு 70 இலட்சம் நட்டம் ஏற்பட்டு வந்தது. இதனால் அலுவலக சேவையாளர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவு கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டது.

தற்போது அவை அனைத்தும் தீர்க்கப்பட்டு அலுவலக சேவையாளர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவு என்பன முறையாக வழங்கப்பட்டு வருவதுடன், மாதமொன்றுக்கு 47 இலட்சம் ரூபாய் இலாபத்தையும் பெற முடிகிறது.

# மூளைசாலிகளின் வெளியேற்றமும்; மூளைசாலி படுகொலையும்

நாட்டின் துரித அபிவிருத்திக்காக மூளைசாலிகள் வெளியேற்றத்தைத் தடுப்பது முக்கியமான காரணங்களில் ஒன்றாகும். இந்நிலையில்தான், மூளைசாலிகள் வெளியேறுவது தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்துள்ளார். இது காலம் கடந்த ஞானமாகும். என்றாலும், இருப்பவர்களை தக்கவைத்துக் கொள்வதற்காக ஆராய்வதை துரிதப்படுத்தவேண்டும்.

மூளைசாலிகள் வெளியேறுவதன் காரணமாக நாட்டின் முன்னேற்றம் மோசமாக பாதிக்கப்படுமென சுட்டிக்காட்டியிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆராயுமாறு அறிவுறுத்தியிருந்தார். எனினும், மூளைசாலிகள் வெளியேறுவதை தடுக்கவே முடியாதுள்ளது.

நிபுணத்துவம் வாய்ந்தவர்களான மூளைசாலிகள் வெளியேறுவதால், நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கான கூடிய வாய்ப்புகள் இழக்கப்பட்டன. எனினும், தங்களுடைய நிபுணத்துவதற்கு ஏற்றவகையில், தொழில் வாய்ப்புகள், சம்பளங்கள் இல்லையெனின், வெளியேறுவதை விடவும் மாற்றுவழி இல்லை.

இலவசக் கல்வித் திட்டம் எமது நாட்டில் சிறந்த மாற்றங்களை உருவாக்கியது. மக்கள் மத்தியில் கல்விச் செயற்பாடுகள் புத்துணர்வு பெற்றன. கல்வித்துறையில் மலர்ச்சியும், ஏற்பட்டது. படித்த இளைஞர்களும் கல்விமான்களும் நாட்டுக்காக தியாக மனப்பான்மையுடன் சேவையாற்ற முன்வர வேண்டியது கடப்பாடாகும்.

யதார்த்தைப் பார்க்கும்போது, பாடசாலை மாணவர்களும் சிறுவர்களும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி, தங்களுடைய வாழ்க்கையை அடியோடு, அறுத்தெறிந்து கொண்டிருக்கின்றனர். ஆக, போதைப்பொருளுக்கு முற்றுப்புள்ளி வைக்காவிடின், நிலைமை இன்னும் மோசமானதாக மாறும்.

போதைப்பொருள் பாவனையாளர்களால், அப்பாவி மக்களும் பாதிக்கப்படுகின்றனர். அஞ்சுகின்றனர், வெளியான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் ஒன்பது ‘ஏ’ தர சித்தியைப் பெற்ற கண்டியைச் சேர்ந்த மாணவன் மீது மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களே இவ்வாறு, மனிதாபிமானமற்ற செயலில் ஈடுபட்டுள்ளனர் என்பது விசாரணைகளின் ஊடாக தெளிவாகிறது. ஆகையால், பொலிஸாருக்கு கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில், இரகசிய தன்மையை பாதுகாத்து, சந்தேகநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, தகவல்களை தருவோரை, காட்டிக் கொடுத்துவிடக்கூடாது.

பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்காவிடின், மூளைசாலைகள் உருவாகவே மாட்டார்கள், போதைக்கு அடிமையானவர்களை விடவும், முன்னேற வேண்டுமென்ற வெறியுடன் கல்வி பயிலும் மாணவர்களும், அவர்களுடன் குடும்பத்தினரும் பெரும் அச்சத்துடன் காலத்தை கடத்திக் கொண்டிருக்கின்றனர்.

மூளைசாலிகளை வெளியேறுவதை ஆராயவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதேபோல, மூளைசாலிகள் உருவாகுவதற்கு இடையூறாக இருக்கும் ஏனைய சமூக காரணிகள், சமூக விரோத செயற்பாடுகள் தொடர்பில் துரிதமாக ஆராய்ந்து, முறையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென வலியுறுத்துகிறோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# ரணில் விரித்திருக்கும் புதிய வலை!



புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த நாட்களில் வெளியிட்ட இருவேறு கருத்துக்கள் தமிழ் மக்களை எரிச்சலடைய வைத்திருக்கின்றன. முதலாவது, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளுக்கு தமிழ்க் கட்சிகள் முன் நிபந்தனைகள் ஏதுமின்றி வரவேண்டும் என்பது. இரண்டாவது, ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்தில் முன்வைக்கப்பட்டு தோல்வியடைந்த மாவட்ட அபிவிருத்தி சபைகளை மீள கொண்டுவருவது தொடர்பிலானது.

சுதந்திர இலங்கையில் தமிழ்த் தரப்புக்களுக்கும் தென் இலங்கை ஆட்சியாளர்களுக்கும் இடையில் பல்வேறு தடவைகள் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருக்கின்றன. அவை பண்டா -செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் தொடங்கி, நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசியலமைப்பின் ஊடாக தீர்வு காண்பது வரையான பேச்சுக்கள் வரை நீண்டிக்கின்றன. பண்டா - செல்வாவுக்கு இடையிலான ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்திருந்தால், நாடு நீண்ட நெடிய ஆயுத மோதலைக் கண்டிருக்காது. இன முரண்பாடுகள் பாரியளவில் எழுந்தும் இருக்காது. ஆனால், நாட்டின் நலன், ஒருமைப்பாடு, இன நல்லிணக்கம் கடந்து பௌத்த சிங்கள அடிப்படைவாதத்தின் மேலாண்மையும் அதன் வழியான ஆட்சியமைப்பும் பிரதான இடத்தில் இருப்பதாலேயே நாடு படுபாதாளத்துக்குள் வீழ்ந்தது. பௌத்த சிங்கள மேலாதிக்கத்தினால் தென் இலங்கையின் சிங்கள மக்கள் எதுவித நன்மையையும் அடைந்துவிடவில்லை. மாறாக, ஆளும் வர்க்கமும், அவர்களுக்கு இணக்கமான தரப்புக்களுமே ஆதாயங்களை அடைந்திருக்கின்றன.

அப்படியான நிலையில், நாட்டின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை ஆளும் வர்க்கமும், பௌத்த சிங்கள மேலாதிக்க சக்திகளும் தொடர்ச்சியாக தவிர்த்தே வந்திருக்கின்றன. நாட்டில் நீடிக்கும் அரசியல் பிரச்சினையும் அதனால் மேலும் மோசமடையும் இன முரண்பாடுகளுமே ஆட்சியைப் பிடிப்பதற்கும் தக்க வைப்பதற்குமான பிரதான சூத்திரமாக தென் இலங்கையில் பேணப்படுகின்றது. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளினால் அரசியல் பிரச்சினைகளுக்கான பேச்சுவார்த்தைக்கு ஆளும் தரப்பு வந்தால், அதனை எதிர்க்கட்சி பலமாக எதிர்க்கும். அந்த எதிர்க்கட்சியே, அடுத்து ஆளும்தரப்பாக வந்ததும் பேச்சுவார்த்தை நடத்தினால், முன்னைய ஆளும்கட்சி அதனை எதிர்க்கும். இதுதான், தென் இலங்கை ஆட்சியாளர்களின் தொடர் செயற்பாடு.

பண்டா  செல்வா ஒப்பந்தம், பௌத்த தேரர்களின் போராட்டத்தினால் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவினால் கிழித்தெறியப்பட்டது. அந்த ஒப்பந்தம் சிலவேளை நடைமுறைக்கு வந்திருந்தால், சிலவேளை, இலங்கை முன்னோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் நாடுகளில் ஒன்றாக இருந்திருக்கும். இலட்சக்கணக்கான உயிரிழப்புக்கள் தடுக்கப்பட்டிருக்கும்.

> **காலங்காலமாக தென் இலங்கை ஆட்சியாளர்கள் தந்திரத்தின் வழியாக தமிழ் மக்களை தோற்கடிக்க முயற்சித்திருக்கிறார்கள். அந்த முயற்சி தமிழ் மக்களை மாத்திரமல்ல, ஒட்டுமொத்த நாட்டையுமே தோற்கடித்திருக்கின்றது**

பல்லாயிரக்கணக்கானவர்கள் கடத்தல்கள் காணாமல் போதால்களினால் இல்லாமல் ஆகியிருக்க மாட்டார்கள். ஆனால், நடந்ததோ வேறு. சிங்கள மட்டும் சட்டத்தினை முன்னிறுத்தி இனவாத அரசியலை ஆட்சிபீடம் ஏறுவதற்காக முன்னிறுத்திய பண்டாரநாயக்க, அதனை பேரழிவின் பெரும் புள்ளியாக வைத்துச் சென்றார்.

பிரித்தானியாவிடம் இருந்து ஆட்சியுரிமையை தென் இலங்கையின் பெரும் அரசியல் வர்த்தக குடும்பங்கள் பெற்ற போது, வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களும் தென் இலங்கையின் சாதாரண சிங்கள மக்களும் எதுவித நம்பிக்கைகளும் இன்றியே இருந்தார்கள். அந்த நம்பிக்கையீனம் இன்று வரையில் மாறவில்லை. மாறாக இனவாத, வர்க்க முரண்பாடுகள் தென் இலங்கை பூராவும் விதைக்கப்பட்டன. குறிப்பாக, மகா வம்ச மனநிலையோடு, பௌத்த அடிப்படைவாத சிந்தனைகளை முன்னிறுத்தினார்கள்.

அப்படி முன்னிறுத்தியவர்களில் பெரும்பாலானோர், பிரித்தானிய ஆட்சிக்காலத்தில், பிரித்தானியரின் மதத்தையும், கல்வியையும் பெற்றவர்கள். அவர்களுக்கு பௌத்தம் குறித்த எந்தவித கோட்பாட்டு விளங்கங்களோ, அறிவோ இல்லை. மாறாக, சுதந்திர இலங்கையில் ஆட்சியைப் பிடிப்பதற்கு பௌத்த அடிப்படைவாதத்தை முன்னிறுத்துவதே இலகுவான வழி என்ற புள்ளியில் அவர்கள் அனைவரும் அதனை தெரிவு செய்தார்கள். சேனநாயக்க குடும்பம், விஜயவர்த்தன குடும்பம், பண்டாரநாயக்க குடும்பம் என்று இலங்கை ஆட்சி செய்து யார் யாரெல்லாம் சீரழித்தார்களோ, அவர்கள் எல்லாருக்கும் அது பொருந்தும்.

சிங்கள மட்டும் சட்டமும், பௌத்தத்துக்கு முதலிடம் எனும் நிலையும் தென் இலங்கை ஆட்சியாளர்களினால் நாட்டை சீரழிப்பதற்காக வைக்கப்பட்ட பொறிகள். சுதந்திரத்துக்குப் பின்னரான 75 ஆண்டுகளில் இந்த இரு சட்டங்களினாலும் தென் இலங்கையின் சாதாரண மக்கள் கூட எந்தவித நன்மையையும் அடையவில்லை.

மாறாக, இன்றைக்கு தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற எந்த வேறுபாடுமின்றி நாட்டை விட்டு வெளியேறுவதற்கான உணர்வோடு அலைகிறார்கள். இப்போது கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்கு மாதக்கணக்கில் வரிசையில் காத்திருக்கும் நிலை இருக்கின்றது. வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில் கடவுச்சீட்டுக்கான வரிசை, காத்திருப்பு காணப்படுவதாக குடிவரவு -குடியகல்வு திணைக்களம் அறிவித்திருக்கின்றது.

அப்படியானால், நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஒவ்வொரு நாளும் பல்லாயிரம் பேர் தயாராக இருக்கிறார்கள். அதில், பெரும்பான்மையான சாதாரண மக்கள் வெளிநாடுகளுக்கு செல்வதற்கான வசதி வாய்ப்பின்றி இருக்கிறார்கள். இல்லையென்றால், ஒருசில மாதங்களிலேயே நாட்டிலிருந்து கணிசமானவர்கள் வெளியேறிவிடுவார்கள். அதுதான் இன்றைய நிலை. இதுதான் பௌத்த சிங்கள அடிப்படைவாதமும், அதனைமுன்னிறுத்தி விட்ட ஆட்சிமுறையும் செய்த சாதனைகள்.

> **சிங்கள மட்டும் சட்டமும், பௌத்தத்துக்கு முதலிடம் எனும் நிலையும் தென் இலங்கை ஆட்சியாளர்களினால் நாட்டை சீரழிப்பதற்காக வைக்கப்பட்ட பொறிகள். சுதந்திரத்துக்குப் பின்னரான 75 ஆண்டுகளில் இந்த இரு சட்டங்களினாலும் தென் இலங்கையின் சாதாரண மக்கள் கூட ஏந்தவித நன்மையையும் அடையவில்லை.**

நிலைமை அப்படியிருக்க, தமிழ்க் கட்சிகள் பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனைகள் இன்றி வர வேண்டும் என்று ரணில் கூறுவதை எவ்வாறு காண வேண்டும். தமிழ்க் கட்சிகள் முன்வைக்கும் நிபந்தனைகள், பௌத்த சிங்கள மேலாதிக்க நிறுவனங்களும், கட்டமைப்பும் வடக்கு கிழக்கில் புரியும் அத்துமீறல்கள் ஆக்கிரமிப்புக்களை நிறுத்தக் கோருவதாகும். அதனை, அரச இயந்திரம் நினைத்தால் உடனயே நிறுத்திவிடலாம்.

ஏனெனில், அந்த ஆக்கிரமிப்புக்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுபவை. அப்படியான நிலையில், அதனை நிறுத்தக் கோருவது முன் நிபந்தனையாக கொள்ள வேண்டியதே இல்லை. அத்தோடு, தமிழ் மக்களின் பாரம்பரிய நிலப்பகுதியில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வை கோருவது எவ்வாறு முன் நிபந்தனையாகலாம் என்று தெரியவில்லை. தமிழ் மக்களின் தொடர் கோரிக்கையே, பாரம்பரிய நிலப்பகுதியில், மேலாதிக்கம், ஆக்கிரமிப்புக்கள் அற்ற, ஒருங்கிணைந்த நாட்டுக்குள்ளான ஆட்சி முறையே, அதனையே, சமஷ்டி என்கிற சொல்லின் கீழ் வரையறுக்கிறார்கள். பேச்சுவார்த்தை மேசையில் சமஷ்டி அதிகார பகிர்வு குறித்து பேச வேண்டும் என்று கோருவதை முன் நிபந்தனையாக ரணில் காட்டுவது, மிக மோசமான அணுகுமுறை.

அத்தோடு, ஜே.ஆர். காலத்து மாவட்ட அபிவிருத்தி சபைகள் என்கிற முறையினூடாக நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாம் என்று அவர் பேச ஆரம்பித்திருப்பது சதி நோக்கிலானது. அது, இந்திய - இலங்கை ஒப்பந்தங்களின் பிரகாரம் தோற்றம்பெற்ற மாகாண சபைகளையும் இல்லாமற் செய்யும் தந்திரத்துடனானது. அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளை இல்லாமற் செய்ய வேண்டும் என்பது, தென் இலங்கையின் இனவாத மதவாத சக்திகளின் ஒரே நிலைப்பாடு. அப்படியான நிலையில், அதனை நிறைவேற்றுவதற்காக மாவட்ட அபிவிருத்தி சபை என்கிற தோல்வியடைந்த முறையை ரணில் முன்நகர்த்துவது திட்டமிட்ட செயலாகும்.

அதன்போக்கில்தான், சமஷ்டி கோரும் தமிழ்க் கட்சிகளை முன் நிபந்தனைகள் இன்றி பேச்சுக்கு வருமாறு அவர் கோருகிறார். அவர், அதிகபட்சம் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்குள் விடயத்தை முடித்துக் கொள்ள நினைக்கிறார். ஆனால், தமிழ்க் கட்சிகளோ மாகாண சபை முறைகளைத் தாண்டிய சமஷ்டிக் கோரிக்கைகள் சார்ந்த நிலைப்பாடுகளில் இருக்கின்றன. அப்படியான நிலையில், ரணிலின் பேச்சினை விசமத்தனமாக கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாதது.

காலங்காலமாக தென் இலங்கை ஆட்சியாளர்கள் தந்திரத்தின் வழியாக தமிழ் மக்களை தோற்கடிக்க முயற்சித்திருக்கிறார்கள். அந்த முயற்சி தமிழ் மக்களை மாத்திரமல்ல, ஒட்டுமொத்த நாட்டையுமே தோற்கடித்திருக்கின்றது. இப்போதும் அந்த முயற்சிகளிலேயே ரணில் ஈடுபடுகிறார். அவர், தன்னுடைய முன்னோர்கள் வழியில் நின்று விலகுவதற்கு தயாராக இல்லை.



## வாழ்வியல் தரிசனம்

நம்பிக்கைகளைப் பாதுகாத்து, மனஉறுதியுடன் அழியாமல் வைத்திருங்கள். நல்லவைகளை நெஞ்சத்தில் இருத்தி, உரமேற்றுங்கள்.

முன்னேறும் பாதையில் நீங்களே உங்களை வழிநடத்திச் செல்லுங்கள். கண்டவர் பேச்சுகளை நம்ப வேண்டிய அவசியமில்லை. கேட்க வேண்டிய பெரியோரிடமே கேட்டு அறியவேண்டும். போராட்டமான வாழ்க்கை இதுவெனக் கலங்குதல் கூடாது.

எதிழர்மறைக் கருத்துகளை சிலர் அள்ளி வீசுவார்கள். கண்டுகொள்ள வேண்டாம். எங்களுக்குள் முடிவு எடுக்கும் திறமை உண்டு. எங்களால் உருவாக்கும் திறமை மிகு கருமங்களை பிறர் தடுக்க முடியாது.

உங்களை நீங்களே நிர்வகித்துக் கொள்க. நீங்களே உங்களை ஆள்பவராவீர்கள். உங்களது செயல்களும் உங்களுக்கெயானது.

எந்த நற்றெயல்களையும் செய்திட கடவுள் ஆசீகள் உண்டு. உங்களுக்குள் பிரவாகிக்கின்ற மகிழ்ச்சி நிலையே, உங்களக்குள் ஒளியூட்டும்.

தற்செயலான இடையூறுகள் சாதாரணமானவை; நிரந்தரமானவை அல்ல. புரிந்து கொள்ளுங்கள் - உருவாக்குபவன் படைப்பாளி.

பல கருமங்களை உங்கள் மூலம் ஒழுங்காகச் செய்ய இறைவன் ஆணையிட்டுள்ளான். தொடர்ந்து கருமம் ஆற்றுங்கள்.

எந்த நற்றெயல்களையும் செய்திட கடவுள் ஆசீகள் உண்டு. உங்களுக்குள் பிரவாகிக்கின்ற மகிழ்ச்சி நிலையே, உங்களக்குள் ஒளியூட்டும்.

தற்செயலான இடையூறுகள் சாதாரணமானவை; நிரந்தரமானவை அல்ல. புரிந்து கொள்ளுங்கள் - உருவாக்குபவன் படைப்பாளி.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வெள்ள நீரில் கழிவுகளை வீசும் விசமிகள்

யாழ்ப்பாணம், சோமசுந்தரம் வீதியையும் கோவில் வீதியையும் இணைக்கும் கோவில் ஒழுங்கை பகுதியில் கழிவுகளை விசமிகள் வீசி வருவதால், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது மழைக் காலம் ஆரம்பித்ததுள்ள நிலையில், குறித்த ஒழுங்கையில் வெள்ளநீர் தேங்கி நிற்கிறது. இதனால், ஒழுங்கைக்குள் வசிப்பவர்கள் போக்குவரத்து உள்ளிட்ட விடயங்களில் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில்,டு தற்போது விஷமிகள் அந்த ஒழுங்கைக்குள் கழிவுகளை கொட்டுவதால், பலத்த இன்னல்களை அப்பகுதிகளில் வசிப்போர் எதிர்நோக்கியுள்ளனர்.

வீசப்படும் கழிவுகள், மழை வெள்ளத்தில் மிதந்து வீட்டு வளவுகளுக்குள் வருவதனாலும், வீதிகளில் வெள்ளநீருடன் கழிவுகள் சிதறி காணப்படுவதாலும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.


இது தொடர்பில் மாநகர சபை உள்ளிட்ட தரப்புகளுக்கு அறிவித்துள்ள போதிலும் , உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எம். றொசாந்த்



ஐந்தாம் ஆண்டில் கால்பதிக்கிறான்

# நம்ம ரேடியோ கெபிட்டல் FM



யதுஷா ரவித்தியாகராஜா

இலங்கையில் ஒரு புதிய பரிணாமமாய் நிமிர்ந்த நன்னடையில் நேர்கொண்ட பார்வையில், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும், கலைத்தேடலுக்கும் ஏற்றாற் போல. புதியன செய்து புதுவிதிப்படைப்பதற்காய். தடைகள் பல தகர்த்து இலட்சக்கணக்கான ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்போடு, வானொலிசார் ஜாம்பவான்களின் திடமான திட்டமிடலுடன் கலைப்பசியோடு காத்திருந்த இளையவர்களின் துடிப்புமிக்க ஆர்வத்துடன் உறுதியான முகாமைத்துவத்துடனும் நேர்த்தியான ஒலிநயத்துடனும் 2017 ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி 'இது நம்ம ரேடியோ' என்னும் மகுட வாசகத்தை சுமந்தவாறு FM 94, 103.1 என்னும் பண்பலைகளிலும் WWW.CAPITALFM.LK என்னும் இணையத்தளத்தின் ஊடாகவும் அத்தியாயத்தை ஆரம்பித்தது கெபிட்டல் FM .

காலத்துக்கும் நேரத்துக்கும் ஏற்றவகையிலான நேர்த்தியான நிகழ்ச்சிகள், சிறப்பான பாடல்தெரிவுகள், நேயர்களுக்கிடையில் நெருங்கிய நட்புறவு, அதிரும் பிரமாண்டமான இசை நிகழ்ச்சிகள், நாட்டு நடப்புக்களை உண்மைத்தன்மையுடன் உடனுக்குடன் வழங்கும் செய்திபிரிவினர், துடிப்புமிக்க இளம் அறிவிப்பாளர்கள், அவர்களை வழிநடத்தும் ஆளுமைகள், பட்டிதொட்டி எங்கும் விரும்பிக்கேட்கத் தோன்றும் நிலைய குறியிசைகள் பௌர்ணமி தின அமானுஷ்ய நாடகங்கள், என அடுத்த தலைமுறைக்கும் புதுமைகளை தரக்கூடிய பல படைப்புகளோடு தன் வெற்றிப்பயணத்தில் உச்சம் தொட்டு மக்கள் மத்தியில் விரும்பிக்கேட்கும் வானொலியாக தன் நாமத்தை பதித்துக்கொண்டது கெபிட்டல் FM.

TRYMASS MEDIA NETWORK நிறுவனத்தலைவர் வின்சேந்திரராஜனின் எண்ணக்கருவில் உருவான கெப்பிட்டல் FMஐ திருமதி சுமதி வின்சேந்திரராஜன், நிதர்ஷன் வின்சேந்திரராஜன், விதுர்ஷன் வின்சேந்திரராஜன் ஆகியோர் பணிப்பாளர்களாக இருந்து திறம்பட வழிநடத்துகிறார்கள்.

இவர்களுடன் கெப்பிட்டலின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக லீ சிங் மே, அலைவரிசை பிரதானியாக K.C பிரகாஷ் சிரேஸ்ட முகாமையாளராக A.L ஜவீர். நிகழ்ச்சி முகாமையாளராக T தரணிதரன், தலைமை நிர்வாகி மற்றும் இசைக்கட்டுப்பாட்டாளராக S.T ரவுப், உதவி முகாமையாளர்களாக திருமதி. ஹம்சி மாலன் ஆகாஷ் ரஜீவ உட்பட அறிவிப்பாளர்களான பிரவீனா, பிருந்தா, கிருசாந்தினி, அழகேந்திரன், குருஈஸ்வர் திரேஷ்குமார், கெலிஸ்டஸ், சஞ்சய், ரீஜிவன்,ரேகாசினி,கனுசியா, ஆகியோருடன் செய்திப்பிரிவு முகாமையாளராக டில்ஷான் தாலிப், வெளிக்கள செய்தி முகாமையாளராக பிரஷாந்தன் மற்றும் செய்தியாசிரியர்களான பாசித் ஏ நியாஸ், வினிப்பிரியா, பிரசாந்தி, யதுஷா மற்றும் video editor வர்ணா,ரூபன் போன்றோரும் சிறப்பாக கடமையாற்றுகிறார்கள்.

நேயர்களின் நெஞ்சம் நிறைந்த வானொலியாக மாறியிருக்கும் கெப்பிட்டல் FM நேர்த்தியாக தன்னுடைய நிகழ்ச்சிகளை வடிவமைத்திருக்கிறது.

காலை 5 மணியில் இருந்து ஏழுமணி வரை பிருந்தா மற்றும் கனுசியாவுடன் நல்லூர் ஆலய மணியோசையோடு ஆரம்பமாகும் வணக்கம் கெப்பிட்டல் நிகழ்ச்சியும்,

7 மணியில் இருந்து 10 மணிவரைக்கும் புதிய நடையில் அறிவியல் உண்மைகள், பத்திரிகை கண்ணோட்டம், மக்களின் எதிர்பார்ப்பு அவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு மற்றும் தெளிவுடன் கேட்ப்போரையெல்லாம் கலகலப்பாக வைத்திருக்கும் காலை நேர நிகழ்ச்சியினான விவேகம் பீ பொசிட்டிவ் நிகழ்ச்சியினை அலைவரிசை பிரதானி K.P.C யுடன் பிரவீணா தொகுத்து வழங்குகிறார்.

காலை பத்துமணியில் இருந்து ஒரு மணிவரைக்கும் 90களில் வெளியான பாடல்களோடும், புதிய புதிய சினிமா தகவல்களோடும், ஹம்சி மற்றும் திரேஷ் தொகுத்து வழங்கும் கெப்பிட்டல் ரிதம் நிகழ்ச்சியும். ஒருமணியில் இருந்து மூன்று வரைக்கும் ஆகாஷ், ரஜீவ் தொகுத்து வழங்கும் இடைக்கால பாடல்களில் ராகமாக ஒலிக்கும் பாட்டுதலைவன் நிகழ்ச்சியையும் கேட்கலாம்.

உள்நாட்டு அரசியல் விடயங்களையும், உலக நடப்புகளையும், விளையாட்டுச் செய்திகளையும், கல்விச்சார்ந்த ஆளுமைகளையும், மாணவர்கள் மற்றும் கலைஞர்களின் புதிய படைப்புக்களையும் நாடறியசெய்யும் வண்ணம் தரணீதரன் மற்றும் கிருஷாந்தியுடனான மாத்தியோசி நிகழ்ச்சியும், மாலை 5-8மணிவரைக்கும் கலகலப்பான நகைச்சுவைகளோடு கெப்பிட்டல் ட்ரைவ் நிகழ்ச்சியினை கெலிஸ்டஸ், மற்றும் ரோகாசினி இணைந்து வழங்குகிறார்.

இரவு 8-10 மணிவரையும் இதயத்தின் மூச்சுக்காற்றாய் ஒலிக்கும் காதலுடன் நிகழ்ச்சியினை அழகேந்திரனும் பத்து மணியிலிருந்து 12 மணிவரைக்கும் காதலையும் கவிதையையும் சுகமாய் தந்து இடைக்கால பாடல்களை தரக்கூடிய இரவு நேரத்து முதன்மை நிகழ்ச்சியினான நீ நான் இசை நிகழ்ச்சியினை சிரேஷ்ட அறிவிப்பாளர் A.L ஜவீர் சிறப்பாக திறம்பட படைத்துகொண்டிருக்கிறார்.

அத்தோடு 12 மணியிலிருந்து அதிகாலை மூன்று மணி வரை துள்ளல் பாடல்களோடு விடியும் வரை நிகழ்ச்சியினை சஞ்சய், மற்றும் ரிஜீவன், கெபிட்டல் காற்றலையின் இரவுபொழுதை கோலாகலமாக கொண்டுச்செல்கிறார்கள்.

அதிகாலை மூன்று மணியில் இருந்து நான்கு மணிவரை காற்றோடு கலந்திருக்கும் காதல் கவிதைகளோடு காற்றின் மொழி நிகழ்ச்சியும், நான்கு மணியில் இருந்து ஐந்து மணிவரை நினைவுகளை மீட்டிப்பார்க்க கூடிய நீங்காத நினைவுகள் நிகழ்ச்சியும் கெப்பிட்டலில் ஒலிக்கிறது.

பல நிகழ்ச்சிகளை உருவாக்கி தன்னை தனிப்பாங்கோடு அடையாளம் காட்டும் கெபிட்டலின் இன்னுமோர் அத்தியாயம் Documentary Tamil, நூறாவது அத்தியாயத்தை கடந்துள்ளது மற்றும் சட்டப்படி இருபது, பார்டிநைட், என்ற புதிய நிகழ்ச்சிகளோடு கெபிட்டல் கிளசிக், ஜீனியர் கெபிட்டல், கதைபேசும் காதல், மற்றும் பௌர்ணமி தின சிறப்பு நிகழ்ச்சிகளான காவியபெட்டகம், ரேடியோ கொட்டகை இன்னும் வெள்ளிக்கிழமைகளில் 90களின் வெளியான பாடல்களோடு அதுவொரு கனா காலம் (BACK TO 90S) என்பன பலரீன் எதிப்பார்பை தூண்டியது.

விளையாட்டு விடயங்களை ஆராய்ந்து தொகுத்து தயாரித்து வழங்கும் திக்கெட்டும் விளையாட்டு, அரசியல் விடயங்களை துணிச்சலோடு ஆராயும் அதிகாரம், இளம் தலைமுறையினர் மத்தியில் அறிவிப்பாளர்களை தேடும் முயற்சியில் அறிவிப்பாளர் அதிதியும் ஒலிப்பரப்பாகின்றது. இந்த தேடலின் வழியாக நுவரெலியாவிலிருந்து பிருந்தா இராஜகோபாலன், பண்டாரவளையில் இருந்து கிஷாந்தினி, நாவலப்பிட்டியவிலிருந்து அழகேந்திரன், மாத்தளையில் இருந்து ரேகாஷானி மற்றும் ரீஜிவன், சிலாபத்தில் இருந்து கனுசியா ஆகியோர் கெபிட்டலின் இளம் அறிவிப்பாளர்களாக உருவாகியிருக்கிறார்கள் இன்னும் இந்த வருடத்தின் புதுவருடத்தன்று ஒலிபரப்பான ரேடியோ ரிலே நிகழ்ச்சியும் மக்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியதென்றே சொல்லாம்.

இன்னும் பல புதிய மாற்றங்களோடு ஆறாம் ஆண்டில் ஆண்டில் கால்பதிக்கும் கெப்பிட்டல் FM. இன்னும் முடிவில்லாத வயதுகளை எட்டிப்பிடிக்கப்போகிறது.





நிதர்ஷன் வின்சேந்திரராஜன்


நிறுவனத்தலைவர் வின்சேந்திரராஜன்


விதுர்ஷன் வின்சேந்திரராஜன்

அகமதாபாத்

# கல்லறைகளுக்கு நடுவே தேநீர்


அகமதாபாத் நகரில் கல்லறைகளுக்கு நடுவே கட்டப்பட்ட தேநீர் கடையானது மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

சுமார் 26 கல்லறைகளுக்கு மத்தியில் குறித் தேநீர் கடையானது அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1950ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வரும் குறித்த தேநீர்க் கடையின் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியும் தேநீர் அருந்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது பிரபல ஓவியரான எம்.எஃப்.ஹுசைனும் இங்கு அடிக்கடி வருகை தருவார் எனவும், இங்கு அமர்ந்தவாரே அவர் பல ஓவியங்களை வரைந்துள்ளார் எனவும் குறித்த கடையின் உரிமையாளர் ரசாக் மன்சூரி தெரிவித்துள்ளார்.











அமெரிக்கா

## இந்தியாவின் முதல் 5 செல்வந்தர்கள்

அமெரிக்காவின் முன்னணி வர்த்தக இதழான போர்ப்ஸ் இதழானது நடப்பாண்டிற்கான இந்தியாவின் சிறந்த 100 செல்வந்தர்களின் பட்டியலை அண்மையில் வெளியிட்டிருந்தது.

அந்தவகையில் அதானி குழுமத்தின் தலைவர் 'கௌதம் அதானி' 150 பில்லியன் டொலர்கள் சொத்து மதிப்புடன் இப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இந்தியாவின் மிகப் பெரிய பணக்காரராக வலம் வரும் அதானி, உலக அளவில் மூன்றாவது பில்லியனர் என்ற அந்தஸ்தில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப் பட்டியலில் அதானிக்கு அடுத்தபடியாக ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி 2 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

அதானி மற்றும் அம்பானி இந்தியாவின் 100 பணக்காரர்களின் மொத்த சொத்துக்களில் 30 சதவீதத்தைக் கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சீமானுடன் கைகோர்க்கும் சவுக்கு சங்கர் ?



சமூக வலைத்தளங்களில் அரசியல் கருத்துகளைப் பேசி பிரபலமானவர் சவுக்கு சங்கர்.

சமீபத்தில் நீதித்துறைக் குறித்து இவர் பேசிய விடயங்கள் சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து அவர் மீது குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கப்பட்டு 6 மாத சிறை தண்டனை வழங்கப்பட்டது.

இதன்காரணமாக 'சவுக்கு சங்க' சுமார் இரண்டு மாதக் காலம் சிறையில் இருந்தார். எனினும் அவர் மீது தொடரப்பட்ட வழக்கு மேல் முறையீடு செய்யப்பட்ட நிலையில், நிபந்தனைகளுடன் தற்போது பிணையில் வெளியே வந்துள்ளார்.

இந்நிலையில், சவுக்கு சங்கர் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானை நேரில் சந்தித்து பேசியுள்ளார்.

"சவுக்கு சங்கர் தேர்தலில் ரோட்டியிட்டால், அவரை எதிர்த்து நாம் தமிழர் சார்பில் வேட்பாளரை நிறுத்த மாட்டோம் எனவும், அவருக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்வேன் என்றும், சீமான் தெரிவித்திருந்தார்.

## ஒரு டிக்கெட்டின் விலை 16 லட்சமா?

ஹிந்தியில்வெளியான `ஆஷிகி 2 ` என்ற திரைப் படம் மூலம் புகழ் பெற்றவர் பின்னணிப் பாடகர் அர்ஜித் சிங்.

இவர் இசையமைப்பாளர் ஏ.ஆர் ரஹ்மான் உள்ளிட்ட பல முன்னணி இசையமைப்பாளர்களுடன் பணியாற்றியுள்ளார்.

அதுமட்டுமல்லாது கடந்த 2020, 2021 ஆம் ஆண்டுகளில், ஸ்போடிஃபை (spotify) செயலியில் அதிகளவில் கேட்கப்பட்ட பாடல்களில் இவரது பாடல்களே அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இவரது இசை நிகழ்ச்சியைக் காண படையெடுத்துச்செல்லும் ரசிகர்களுக்கு அண்மையில் அவர் வெளியிட்டுள்ள, அனுமதிக் கட்டணத் தொகைப் பட்டியலானது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இப்பட்டியலின் படி தொடக்கக் கட்டணம் 999 ரூபாய் எனவும், ,சில்வர் மற்றும் கோல்ட் தர டிக்கெட்களின் விலை முறையே 1999 ரூபாய் மற்றும் 3,999 ரூபாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,



இவ்வாறாக படிப்படியாக ஏறும் கட்டணம், ப்ரீமியம் லாஞ்ச் 1ல் முடிகிறது.


இதில் தான் ஒரு டிக்கெட்டின் விலை 16 லட்சம் ரூபாய் எனவும், ப்ரீமியம் லாஞ்சில் மொத்த 40 பேர் அமர்ந்து நிகழ்ச்சியை ரசிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் 16 லட்சம் ரூபாய் என்பது மிகவும் பெரிய தொகையென அவரது ரசிகர்கள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கேரளா

## மோட்டார் சைக்கிளில் பயணித்த

### யுவதி கூட்டுப்பாலியல் வன்புணர்வு



கேரளாவைச் சேர்ந்த யுவதியொருவர் பெங்களூரில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் கிராபிக் டிசைனராக பணியாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை தனது நண்பர்களுடன் கேளிக்கை நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட குறித்த யுவதி வீடு திரும்புவதற்கு தொலைபேசி செயலி (Apps) மூலம் இயங்கும் 'மோட்டார் சைக்கிள் டாக்சி' சேவையொன்றில் முன்பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ தினத்தன்று அப்பெண்ணை அழைத்து செல்ல டாக்சி வந்துள்ளது. இதன்போது குறித்த டாக்சியின் சாரதியான சகாபுதீன் , யுவதியை ஏற்றிக் கொண்டு பயணிக்கையில், யுவதி மதுபோதையில் மயக்கம் அடைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் குறித்த சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட அவர், யுவதியை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று தனது நண்பரான அக்தருடன் சேர்ந்து கூட்டுப் பாலியல் வன்புணர்வு செய்துள்ளார்.

பின்னர், விடிந்ததும் மயக்கத்தில் இருந்து தெளிவடைந்த யுவதியிடம்" நீங்கள் மதுபோதையில் இருந்ததால் உங்களை வீட்டில் விடாமல் இரவு எங்களுடன் உறங்க வைத்து நாங்கள் பாதுகாப்பாக பார்த்துக்கொண்டோம் "எனத் தெரிவித்துள்ளார்.

இதனை நம்பிய யுவதி சகாபுதீனின் வீட்டில் இருந்து வெளியேறி தனது வீட்டிற்கு சென்றுள்ளார்.

இதன்போது அவருக்கு கடுமையான உடல்வலி, மற்றும் உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்று உடல்நல பரிசோதனை செய்துள்ளார். இதன்போது அவர் கூட்டுப்பாலியல் வன்புணர்பு செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த யுவதி, இது குறித்துப் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தமையை அடுத்து குற்றவாளிகளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> **அதிர்ச்சியடையந்த யுவதி, இது குறித்துப் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தமையை அடுத்து குற்றவாளிகளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது**



உலகக் கிண்ணம்:

# ஈரானை வென்ற ஐ. அமெரிக்கா

## அடுத்த சுற்றில் ஐ. அமெரிக்கா, இங்கிலாந்து, நெதர்லாந்து, செனகல்

கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில், நேற்று அதிகாலை நடைபெற்ற ஈரான் உடனான குழு பி போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்ற ஐக்கிய அமெரிக்கா, இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றது.

ஐ. அமெரிக்கா சார்பாகப் பெறப்பட்ட கோலை கிறிஸ்டியன் புலிசிச் பெற்றிருந்தார். தொடரிலிருந்து ஈரான் வெளியேற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில், மற்றைய குழு பி போட்டியில் வேல்ஸை 3-0 என்ற கோல் கணக்கில் வென்ற இங்கிலாந்து இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுக்குத் தகுதி பெற, தொடரிலிருந்து வேல்ஸ் வெளியேறியிருந்தது. இங்கிலாந்து சார்பாக மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் இரண்டு கோல்களைப் பெற்றதோடு, பில் பொடென் ஒரு கோலைப் பெற்றிருந்தார்.

இதேவேளை, நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கட்டாருடனான குழு ஏ போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து வென்ற நிலையில் அவ்வணி இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுக்குத் தகுதி பெற, கட்டார் தொடரிலிருந்து வெளியேறிருந்தது. நெதர்லாந்து சார்பாக, கோடி கக்போ, பிரெங்கி டி ஜொங்க் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், மற்றைய குழு ஏ போட்டியில் ஈக்குவடோரை 2-1 என்ற கோல் கணக்கில் செனகல் வென்று இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுக்குத் தகுதி பெற, ஈக்குவடோர் தொடரிலிருந்து வெளியேறிருந்தது. செனகல் சார்பாக, இஸ்மைலா சர், கலிடு குலிபலி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஈக்குவடோர் சார்பாகப் பெறப்பட்ட கோலை மொய்ஸன் கைசெடோ பெற்றிருந்தார்.

இதேவேளை, இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள ஒரு குழு எஃப் போட்டியில் குரோஷியாவும், பெல்ஜியமும் மோதவுள்ளதுடன், மற்றைய குழு எஃப் போட்டியில் கனடாவும், மொரோக்கோவும் மோதவுள்ளன.

தவிர, நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள ஒரு குழு ஈ போட்டியில் ஜப்பானும், ஸ்பெய்னும் மோதவுள்ளதுடன், மற்றைய குழு ஈ போட்டியில் கொஸ்டா றிக்காவும், ஜேர்மனியும் மோதவுள்ளன.



இந்தியாவுக்கெதிரான ODI தொடரை

## 1-0 எனக் கைப்பற்றியது நியூசிலாந்து இந்தியாவுக்கெதிரான ஒருநாள்

சர்வதேசப் போட்டி (ODI) தொடரை 1-0 என நியூசிலாந்து கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கிறைஸ்ட்சேர்ச்சில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் மழை காரணமாக நியூசிலாந்து 18 ஓவர்களே துடுப்பெடுத்தாடக் கூடியதாக இருந்து முடிவு பெறப்படாத நிலையில், 1-0 என தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

இந்தியா: 219/10 (47.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: வொஷிங்டன் சுந்தர் 51 (64), ஷ்ரேயாஸ் ஐயர் 49 (59) ஓட்டங்கள். பந்துவீச்சு: டரைல் மிற்செல் 3/25, அடம் மில்ன் 3/57, டிம் சௌதி 2/36, லொக்கி பெர்கியூசன் 1/49, மிற்செல் சான்ட்னெர் 1/15)

நியூசிலாந்து: 104/1 (18 ஓவ. ) (துடுப்பாட்டம்: பின் அலென் 57 (54), டெவோன் கொன்வே ஆ.இ 38 (51) ஓட்டங்கள். பந்துவீச்சு: உம்ரான் மலிக் 1/31)

தொடரின் நாயகன்: டொம் லேதம்



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# ஆதிக்கம் செலுத்தும் அவுஸ்திரேலியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்துகிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், பேர்த்தில் நேற்று ஆரம்பமான இந்த டெஸ்டின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் பற் கமின்ஸ், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஆரம்பத்திலேயே டேவிட் வோர்னரை ஜேடன் சியல்ஸிடம் இழந்தது. பின்னர் உஸ்மான் கவாஜாவும், மர்னுஸ் லபுஷைனும் இனிங்ஸ்கைக் கட்டியெழுப்பிய நிலையில் 65 ஓட்டங்களுடன் கைல் மேயர்ஸிடம் கவாஜா வீழ்ந்திருந்தார்.

இதைத் தொடர்ந்து லபுஷைன், ஸ்டீவ் ஸ்மித்தின் இணைப்பாட்டத்தில் பலமான நிலையிலுள்ள அவுஸ்திரேலியா, நேற்றைய முதல் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், லபுஷைன் 154 ஓட்டங்களுடனும், ஸ்மித் 59 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

ஆப்கானிஸ்தானுக்கெதிரான மூன்றாவது ODI-இல்

# இலங்கைக்கு வெற்றியிலக்கு 314 ஓட்டங்கள்

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கையணி வெற்றி பெறுவதற்கு 314 `ஓட்டங்களை பெறவேண்டியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பல்லேகலவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தானின் அணித்தலைவர் ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.



# அச்சுறுத்தும் ‘சோம்பி’

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை



ரஷ்யாவின் சைபிரியாவில் 1,000ஆண்டுகளாக பனிக்கு அடியில் இருந்த 24 வைரஸ்களை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

அந்தவகையில் குறித்த வைரஸுக்கு சோம்பி வைரஸ் என பெயரிடப்பட்டுள்ளது.

மேலும் இவை 48 ,500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்றும் பல ஆண்டுகளாக பனிக்கட்டிக்கு அடியில் வைரஸ்கள் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதில் சிலவற்றை விஞ்ஞானிகள் வெளியே எடுத்து உயிர்ப்பித்து ஆராய்ச்சித்து வருவதாக தகவல் வெளியிட்டுள்ளனர்.

பருவநிலை மாற்றத்தால் பனிக்கட்டிகள் வேகமாக உருகும் நிலையில் திடீரென வைரஸ் தொற்று பரவினால் ஆபத்து அதிகம் எனவும் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் பனிக்கட்டிகள் உருகும் பட்சத்தில் வைரஸ்கள் வளிமண்டலத்துடன் கலந்து கொடிய ஆபத்தை உருவாக்கவும் வல்லது எனவும் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா



## அலுவலகத்திலேயே உறங்கும் டுவிட்டர் மேலாளர்

டுவிட்டர் நிறுவனத்தை கைப்பற்றிய உலகின் முன்னணி செல்வந்தரான எலோன் மஸ்க், அண்மைக்காலமாக டுவிட்டரில் பல மாற்றங்களை செய்து வருகின்றார்.

குறிப்பாக டுவிட்டர் நிறுவனத்தின் முக்கிய பதவிகளில் கடமையாற்றிவரும் பலரை பணி நீக்கம் செய்த எலோன், ப்ளூ டிக் கட்டண உயர்வு, ஆட்கள் குறைப்பு, வருவாய் இரட்டிப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்.

இந்நிலையில், டுவிட்டர் நிறுவனத்தின் ஆரம்பக்கட்ட வளர்ச்சிக்கு உதவியாக இருந்த எஸ்தர் கிராவ்ஃபோர்டு, எலான் மஸ்க் வாங்கிய பிறகும் தற்போது தொடர்ந்து டிவிட்டர் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

தற்போது இரவு பகலாக பணிபுரிந்து வரும் அவர், டுவிட்டர் அலுவலகத்திலேயே பணிசெய்யும் இடத்திலேயே உறங்கும் புகைப்படம் இணையத்தில் பரவி வருகிறது.

இப்புகைப்படத்தை பலர் கேலி செய்தும் பகிர்ந்து வருகின்றனர். ஆனால், இதற்கு பதிலளிக்கும் வகையில், பதிவிட்டுள்ள எஸ்தர் கிராவ்ஃபோர்டு, டுவிட்டர் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பது குறித்து எனக்கு நிலையான கருத்துக்கள் உண்டு எனப் பதிவிட்டுள்ளார்.


ஜேர்மனி





## நுளம்பு கடித்ததால் கோமாவுக்கு சென்ற நபர்

ஜேர்மனியைச் சேர்ந்த செபாஸ்டியன் என்பவரை நுளம்பொன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் கடித்துள்ள நிலையில் அவருக்கு சில நாட்களாக காய்ச்சல் இருந்து வந்துள்ளது.

இதனையடுத்து அவர் வைத்தியசாலை சென்ற போது, அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ” அவரை ஆசிய புலி (Asian tiger) எனப் படும் நுளப்பு கடித்திருப்பதாகவும், இதனால் அவரது ரத்தத்தில் விஷம் கலந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.







## முதல் இடத்தில் டென்மார்க்

உலகின் தூய்மையான நகரங்கள் குறித்த பட்டியலொன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பட்டியலானது சிறந்த சூழல்,முறையான குப்பை கட்டுப்பாடு மற்றும் நன்கு பராமரிக்கப்படும் தாவரங்கள் என்பவற்றைக் அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இப்பட்டியலில் டென்மார்க்கின் -கோபன்ஹேகன் நகரம் முதல் இடத்தையும், சிங்கப்பூரின் -சிங்கப்பூர் சிட்டி இரண்டாவது இடத்தையும், பின்லாந்தில்- ஹெல்சின்கி நகரம் 3 ஆவது இடத்தையும், அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரம் 4 ஆவது இடத்தையும், ஜேர்மனியின் -ஹாம்பர்க் நகரம் 5 ஆவது இடத்தையும், ஸ்வீடனின் -ஸ்டாக்ஹோம் நகரம் 6 ஆவது இடத்தையும் பிடித்துள்ளது.

அத்துடன் 7, 8 ,9 10 ஆகிய இடங்களை முறையே ஜப்பானின் -சப்போரோ நகரமும், கனடாவின் கால்கரி நகரமும், நியூசிலாந்தின் -வெலிங்டன் நகரமும்,அமெரிக்காவின் ஹொனலுலு நகரமும் பிடித்துள்ளன.

அமெரிக்கா

## தாமதமாக வந்த உணவு

### 181 கோடி ரூபாய் நஷ்ட ஈடு



பாஸ்தா எனப்படும் உணவினைத் தயார் செய்ய அதிக நேரம் எடுத்துக் கொண்டதால், `கிராஃப்ட் ஹெய்ன்ஸ்` என்ற உணவு நிறுவனத்தின் மீது பெண்ணொருவர், இலங்கை மதிப்பில் 181கோடி ரூபாய் நஷ்ட ஈடு கோரி வழக்கு தொடர்ந்துள்ளமை அமெரிக்காவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து புளோரிடாவைச் சேர்ந்த `அமண்டா ராமிரெஸ்` என்ற குறித்த பெண் தெரிவித்துள்ள புகாரில்” நவம்பர் 18 ஆம் திகதி கிராஃப்ட் ஹெய்ன்ஸ் நிறுவனம் (KHC) விளம்பரத்தில் தெரிவித்தது போல் இல்லாமல் வெல்வீட்டா மைக்ரோவேவ் மேக் பாஸ்தா , சீஸ் கப் தயார் செய்ய அதிக நேரம் எடுத்துக் கொண்டுள்ளனர். இது சட்டத்தை மீறும் செயலாக உள்ளது என சாட்டினார்.

இந்நிலையில் ” , இது ஏற்க முடியாத வழக்கு என்றும் சட்ட ரீதியாகவே இதனை எதிர்கொள்வோம் என குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 01 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.